Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!

மகாராசி சில்க்ஸ்
சல்வார் கிற
இந்தியன் சாறி வகைகள்
மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்
T.P No - 0777286247

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 29 (24.12.2003) புதன்கிழமை இதழ்:85

## படையினரின் அத்துமீறல் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்!

### யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால

(யாழ்ப்பாணம்)

படையினரின் எத்தகைய அத்துமீறல்கள் குறித்தும் உடனடியாக எனக்கு அறிவிக்கப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க நான் தயாராகவுள்ளேன் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால தெரிவித்தார்.

நேற்று மாலை அரச்சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அதன் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அரசசார்பற்ற பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இராணுவத் தளபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று மக்கள் எவரும் போரை விரும்பவில்லை. மக்களுடைய கருத்துக்களை படையினராகிய நாம் வரவேற்கிறோம். அதனால் அவர்கள் அச்சமின்றிக் கருத்துக்களைத் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியும்!

### இலங்கை விவகாரம் பற்றி சோனியா காந்தி கருத்து



(புதுடெல்கி)

அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென தானும், தனது கட்சியும் நம்புவதாக சோனியா காந்தி தெரிவித்தார்.

'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை கடந்தவாரம் ஒழுங்குசெய்த 'சமாதானத்திட்ட பாதை வரைவு' என்ற இருநாள் கருத்தரங்கின் முதல்நாள் அமர்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தெற்காசிய நாடுகளில் உருவாகும் பிராந்தியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, இந்த நாடுகள் சேர்ந்து ஒரு நாடாளுமன்றத்தை ஏன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# உள்துறை அமைச்சு அதிகாரங்கள் பறிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டன!

## வர்த்தமானி மூலம் ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

**பாதுகாப்பு அமைச்சைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - உள்துறை அமைச்சின் வசம் இருந்த அதிகாரங்களை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றுவதாக அறிவித்துள்ளார்.**

கடந்த 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக உள்துறை அமைச்சுக்குப் பதிலாக, உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு என்ற புதிய அமைச்சு உருவாக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், ஏற்கனவே உள்துறை அமைச்சின் வசம் இருந்த, சிறைச்சாலைகள் திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஆட்பதிவுத்திணைக்களம், இந்திய வம்சாவளியினரைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் அலுவலகம், குடிசனப் புள்ளிவிபரத் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

உள்துறை அமைச்சுக்குப் பதிலாக உருவாக கப்பட்டுள்ள உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயப்பகுதியின் சுமைப்பிரிவு இரு தினங்கள் மூடப்படும்!

(கிளிநொச்சி)

தமிழீழ நிதித்துறையின் ஆயப்பகுதிக்கான சுமை 1 பிரிவு இந்த ஆண்டுக்கான இறுதிப் பணிகளையும், அடுத்த ஆண்டுக்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டங்களையும் மேற்கொள்வதற்காக எதிர்வரும் 30, 31 ஆம் நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

இருப்பினும் நாளாந்தம் பழுதடையக்கூடிய முட்டை, ஐஸ் கட்டி, மரக்கறி என்பவற்றுடன் நாளேடுகள் என்பவற்றை கொண்டு வருவதற்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - பயணிகள் போக்குவரத்து வழமைபோன்று இடம்பெறுமென்று தமிழீழ நிதித்துறையின் ஆயப்பகுதி அறிவித்துள்ளது.

## இராணுவ வாகனம் மோதி இளைஞர்கள் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் பிக்கப் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் கந்தர்மடம் சந்தியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரும் யாழ்.நகரப் பகுதியில் உணவு எடுப்பதற்காக சென்ற சமயமே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் எயிட்ஸ் விழிப்புணர்வு வாரம் நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் கோட்ட ரீதியாக நடைபெற்று வருகிறது.

இந்த விழிப்புணர்வு வாரத்தில் இந்த நோய் பரவுவதைத் தடுப்பது தொடர்பாக பல முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

செயற்படுத்தப்படவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் தமிழீழ சுகாதாரத் துறையினர், தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு விளக்கவுரைகளை வழங்கினர்.

கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொள்ளாத நல்லூர் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கும், யாழ். கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் இந்தக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மதில் இடிந்து விழுந்து சிறுவன் உயிரிழப்பு!

(வல்வெட்டித்துறை)

சேதமடைந்திருந்த வீட்டு மதிலில் நின்று மாங்காய் பறித்து கொண்டிருந்தவேளை, அது இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் வல்வெட்டித்றை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றது.

சேதமடைந்த வீட்டு மதிலில் நின்று மாங்காய் பறிப்பதற்காகச் சிறுவர்கள் சென்றிருந்தனர். இதில் ஒரு சிறுவன் மதிலில் ஏறி மாங்காய் பறிக்கும்போது மதில் இடிந்து வீழ்ந்ததில் கீழே நின்ற விஜயகுமார் வினோத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்நிலைய சம்பவம்; சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

பஸ்நிலைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சிப்பாய் ஒருவர் இனங்காணப்பட்டார்.

யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போதே இவர் சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டார். நீதிவான் இ.விக்னராஜாவின் பணிப்பின் பேரில் பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் 21 இராணுவச் சிப்பாய்கள் இடம்பெற்றனர்.

அவர்கள் அனைவரும் இராணுவச் சீருடையின் தலைக்கவசம் அணிந்தவாறு அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சோதனைச் சாவடிகள் இரவு 9.30 வரை திறந்திருக்கும்!

(கிளிநொச்சி)

கிறிஸ்மஸ் பண்டிகை தினத்திலும், புதுவருட தினத்திலும் விடுதலைப் புலிகளது முகமாலை, புளியங்குளம் மற்றும் மன்னார் உயிலங்குளம் சோதனைசாவடிகள் இரவு 9.30 மணிவரை திறந்திருக்குமென விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளதாக தமிழ்நெற் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி வழமையாக இந்தச் சோதனைச் சாவடிகள் காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை திறந்திருக்கும். ஆனால், கிறிஸ்மஸ் பண்டிகை தினத்தையொட்டி இன்றும் நாளையும் புதுவருட தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 31, 1ஆம் திகதிகளில் இரவு 9.30 மணிவரை திறந்திருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான மக்கள் இந்தப் பண்டிகைக்காலத்தில் தமது உறவுகளுடன் இணைந்துகொள்வதற்காகவே இந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளதாக அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிறிஸ்மஸ் பெரு நாட்களில் ஏ-9 வீதியை இரவும் திறக்குமாறு யாழ். ஆயர் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவப் பெருநாட்களான நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடத்தை ஒட்டி ஏ-9 வீதியூடான போக்குவரத்துச் செய்வதற்கு வசதியாக இரவுவேளை வீதியைத் திறந்து மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் குறித்த கோரிக்கையை யாழ்.ஆயர் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும், பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமை


(10 ஆம் பக்கம் பார்க்க)


மனம் விரும்பும் விலையில் 21 அங்குல T.V
ரூபா 20, 450/- சிங்கரில் மட்டுமே. SINGER
NO.1 Stanley Road, Jaffna
Tel 021-222 5408

# திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்க இடமாற்ற அறிவித்தல்

இல.249, பலாலி வீதியில் இயங்கிவந்த திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கம் இன்றுமுதல் கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இந்து மகாவித்தியாலய முன்வீதியில் (பாடசாலை வீதியில்) இயங்குகின்றது என்பதை சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (567)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



செல்வன்

**குணராஜா மிதுலக்ஸ்சன்**

துரைராஜா வீதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த குணராஜா தம்பதியினரின் புதல்வன் செல்வன் மிதுலக்ஸ்சன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (24.12.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதுடன், பிறந்ததின நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (568)

வாழ்த்துவோர்கள் :
அப்பா, அம்மா, அண்ணா
அம்மம்மா, மாமாமார், அத்தைமார்.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அம்பாள்நகர் திருவையாற்றைச் சேர்ந்த ஆறுமுகம் கருணாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (702845327V) முகமாலைக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "நமது ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (566)

### விற்பனைக்கு

திருநெல்வேலிச் சிவன்கோவில் வீதியிலுள்ள (நர்சிங்ஹோம் அண்மையில்) 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு வே. எதிர்மனசிங்கம் 49, 2 ம் ஒழுங்கை பிறவுண் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம்.(565)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஸ்ரீகாந், சினேகா நடித்த

**பார்த்தீபன் கனவு**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**JOHNNY ENGLISH** (சி-1846)

**ராஜா** யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த

**எனக்கு 20 உனக்கு 18**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சிநெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம்: 05-01-2004**

1. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
   B. DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
   C. DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
   D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
   E. DIPLOMA IN DESK - TOP PUBLISHING — DURATION 6 MONTHS
   F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L — DURATION 3 MONTHS
   G. DIPLOMA IN HARDWARE ENGINEERING — DURATION 1 YEAR

2. CERTIFICATE COURSES:-

| | | |
|---|---|---|
| (i) MS WORD - 2000 | (vi) PASCAL | (xi) d BASE FOR WINDOW |
| (ii) MS EXCEL - 2000 | (vii) d BASE III+ | (xii) PRINT SHOP DELUXE |
| (iii) MS ACCESS - 2000 | (viii) PAGE MAKER | (xiii) ADOBE PHOTO SHOP |
| (iv) MS POWER POINT | (ix) WINDOWS 95 | (xiv) QUICK BOOK |
| (v) VISUAL BASIC VER 6.5 | (x) COREL DRAW | |

| | |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலக்ரிக்ஷன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5. வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திரத் தொழிற்பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| 7. மின்ஒட்டுநர் பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| 8. மரவேலை (With Use of Machinery) | காலம் 6 மாதங்கள் |
| 9. குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

எமது நிறுவனத்தில் கணனிகள் சம்மந்தமான சகல திருத்தவேலைகளும், வானொலி, தொலைக் காட்சிப்பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்துகொடுக்கப்படும்.

Note:1.பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்
2.வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம்காட்டி பங்குக்குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3.எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4.பயிற்சிநெறிகள் சம்மந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**PRODUCITION AND REPAIRING ON ORDER....!** கட்டமைத்தலும், திருத்துதலும்.
சகலவிதமான இரும்புசார் உற்பத்திப்பொருட்கள் ஒட்டுவேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழிசார் அறிவுமூலம் ஒடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

**வாகனத் தகுதிச்சான்றிதழ்- 2004 FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**
2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச்சான்றுதழ் எமது நிறுவனத்தினால் தைமாதம் வழங்கப்படும் என்பதனைசகல வாக உரிமையாளருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் மோட்டார் சைக்கிலுக்கான Engine No. பொறித்துக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :
T.P.NO - 222 6148 (சி/1926)

*REGISTRAR,*
*PATRICIAN INSTITUTE,*
*59,ST. PATRICK'S ROAD, JAFFNA.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
07
10
1948



இயேசுவின் அடியில்
24
11
2003

என் அருமை அன்ரியே!
தாய்போல் அரவணைத்து
பாசத்துடன் காத்தவளே
என்றும் புன்னகை ததும்பும்
சந்திர வதனமதில் கருணை
பொழியும் கண்களும்தாம்
கண்சிமிட்டிட இனிய
குரலால் தேன் மொழி பேசும்
என் மாதாவே,
உதவும் கரங்களுடை
உத்தமியே, சீரும்
சிறப்புமாய் யான் வாழ வழி
காட்டி ஆதரவு தந்தவளே,
எனைத் தவியாய்த் தவிக்க
விட்டு இயேசுவின் திருப்பாதம்
சென்றடைந்ததேனோ!
உனக்காக வணங்குவேன்
அப்பாதம் என்றென்றும்

## திருமதி எட்வேட் நீற்றா (ராணி)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 10:25)

மேரி சைவ உணவகம்
சங்கானை

மருமகன்
எ.வில்சன்
குடும்பத்தினர்

(சி-1925)

### யூ. என். எச். சி. ஆரின்

# 2003 ஆம் ஆண்டுக்கான விருது இலங்கையருக்கு வழங்கப்படுகிறது

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான விருதுகள் மூன்று இலங்கையர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அருள் சுப்பிரமணியம் (வயது 27) என்ற பெயருடைய திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கு விருது வழங்கப்படவுள்ளது. இடம்பெயர்ந்த மக்களுக்கு, யு.என்.எச்.சி. ஆருடன் இணைந்து செயற்பட்ட சேவைகளுக்கும், இளம் வயதினராக இருந்தாலும், சேவையாற்றிய விதம் குறித்த திருப்தி காரணமாக இவருக்கு 2003 ஆம் ஆண்டுக்கான சர்வதேச விருது வழங்கப்படவுள்ளது.

சித்திரலேகா மௌனகுரு என்பவர் இரண்டாவது விருது பெறும் இரண்டாவது இலங்கையர் ஆவார். இவர் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். இவர் ஆரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் ஸ்தாபகரும், இடம் பெயர்ந்த மக்களுக்கான சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருபவருமாவார்.

யுத்தத்தினால் ஊனமுற்றவர்களுக்கு உதவி புரிந்தமைக்காக என்.ஜி கமலாபதி என்பவருக்கும் யு.என்.எச்.சி.ஆர் விருது வழங்கப்படவுள்ளது. இவர்கள் மூவருமே யு.என்.எச்.சி.ஆரின் சர்வதேசவிருது பெறும் மூன்று இலங்கையர்கள் ஆவர். (01)

### வத்தளையில்

## முஸ்லிம்களின் வீடுகள் தாக்கப்பட்டன சந்தேகத்தின் பேரில் 13 பேர் கைது

(கம்பஹா)

கம்பஹா வத்தளைப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வீடுகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மூன்று முஸ்லிம்களின் வீடுகளும், பள்ளிவாசல் ஒன்றும் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு அசம்பாவிதமேதும் நடைபெறாமல் இருப்பதற்காக பொலிஸார் நேற்றுக்காலை ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தினர். (01)

# பொலிஸாரின் திறமையை வெளிப்படுத்த புதிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படும்

### புதிய பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா

பொலிஸாரின் திறமைகளை முன்னுக்கு கொண்டுவரும் நோக்கில் புதிய திட்டம் ஒன்றை கொண்டுவர இருப்பதாக, புதிய பொலிஸ்மா அதிபரான இந்திர-டி-சில்வா தெரிவித்தார்.

தனது கடமைப் பொறுப்புக்களை ஏற்ற பின்னர் பத்திரிகையாளருடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் சேவையில் கீழ்மட்ட நிலையிலுள்ள அதிகாரிகளில் ஏற்பட்ட விரக்தியே பொலிஸார் தமது பங்களிப்பை செய்யாமல் பொலிஸ் சேவை வீழ்ச்சியடைவதற்கு காரணமாகும். எனவே, இந்தக் குறைபாட்டினை நீக்குவதற்கு பெரியதிட்டம் ஒன்று தேவையாகவுள்ளது.

அத்துடன் பொலிஸாருக்கான, பதவி உயர்வுகள் சரியான முறையில் செய்யப்படும். இவர்களுக்கான இடமாற்றங்கள் தொடர்பான திட்டங்கள பொலிஸ் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான திட்டங்கள் 1979 ஆண்டுக்கு முன்னரும் நடைமுறையில் இருந்தது எனவும் தெரிவித்தார். பதவி உயர்வு என்பது, பொலிஸாரின் நடத்தையையும், அவர்களது பதவி நிலையையும் முக்கியமாக கவனத்தில் எடுத்திருக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகாவும் தனது பூரண ஆதரவை வழங்குவதாகப் பொலிஸ் திணைக்களத்திற்குத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள குற்றச்செயல்கள் தொடர்பாக தெரிவிக்கையில் இந்தக் குற்றச் செயல்களை எதிர்த்துப் போராட பாரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

### இலங்கையின் ஒருநாள் போட்டி அணித் தலைவர்

# அத்தபத்து இருந்த அறையில் 1.1 மில்லியன் ரூபா மீட்பு!

(கொழும்பு)

இலங்கையின் ஒருநாள் போட்டிக்கான கிரிக்கெட் அணியின் தலைவர் மாவன் அத்தப்பத்து கண்டியில் தங்கியிருந்தவேளை, அவரது அறையிலிருந்து ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கண்டியில் இலங்கை - இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய போது நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக மாவன் அத்தப்பத்து தெரிவிக்கையில் - இந்தப் பணம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது எனவும், இந்தப்பணம் தன்னுடையது இல்லையெனவும் இதற்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப்பணம் தொடர்பாக போட்டிகளின் முடிவை மாற்றும் திட்டமெதிலும் தான் ஈடுபடவில்லையெனவும், தெரிவித்த அத்தப்பத்து தனது கிரிக்கெட வாழ்க்கையை கெடுப்பதற்கு வேண்டுமென்றே யாராவது திட்டமிட்டு செய்த செயலாக இது இருக்குமெனக் கூறினார்.

இதேவேளை, குற்றவியல் திணைக்களம் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள விருப்பதாக கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அத்தப்பத்து இருந்த ஹோட்டலின் அறையிலிருந்து 1.1மில்லியன் ரூபா கண்டுபிடிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஏ9 வீதியால் இரவு நேரங்களிலும் போக்குவரத்துக்கு நடவழக்கை

ஏ-9 பாதையை பயணிகள் மேலும் கூடுதல் நேரம் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஓமந்தை சோதனைச் சாவடிப் படைத்தரப்பினர் கூறியுள்ளனர்.

இந்த வீதியூடான பயணத்தை இரவிலும் மேற்கொள்ள வழிசெய்யும் வகையில், ஓமந்தை சோதனைச் சாவடிக்கு மின்னிணைப்பினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தியானதும், முதற்கட்டமாக இந்த வீதியூடான பயணத்தை இரவு பத்துமணி வரையில் மக்கள் மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்துள்ள படையினர், 24 மணிநேரமும் இந்தப் பாதையை போக்குவரத்துக்கு திறந்துவிடுவது பற்றி யும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டனர்.

24 மணி நேரமும் ஏ-9 பாதையினை மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடும் வகையில், இப்பாதையின் மின்னிணைப்பு வசதிக்காக ஐரோப்பிய ஒன்றியம் 42 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஏ-9 பாதையினூடாகப் பயணிக்கும் பயணிகளில் மோட்டார் சைக்கிளில் பயணம் செல்வோரின் தொகை அதிகரித்திருப்பதாகவும், இவர்கள் அடிக்கடி விபத்துக்கு உள்ளாவதாகவும் தமிழீழக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினராக கோபாலசுந்தரம் நியமிக்கப்பட்டார்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக கலாநிதி எம். கோபாலசுந்தரம், ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் துறைசார் நிபுணர்களின் சம்மேளன முன்னாள் தலைவராவார். முன்னர் தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்து விலகிய ஈபேட்டின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# 175 இராணுவ அதிகாரிகள் பயிற்சி முடித்து வெளியேற்றம்!

இராணுவத் தொண்டர்படை மற்றும் நிரந்தரப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த 175 கடேற் அதிகாரிகள் தமது பயிற்சிகளை முடித்து இராணுவ சேவையில் இணைந்து கொண்டனர்.

பயிற்சி முடித்துக் கொண்டு அதிகாரிகள் வெளியேறும் அணிவகுப்பு நிகழ்வு - கடந்த சனிக்கிழமை தியவத்தலாவ இராணுவப் பயிற்சி அக்கடமியில் இடம்பெற்றது.

பயிற்சியை முடித்த அதிகாரிகள் இராணுவத்தில் இரண்டாம் லெப்ரினன் தர ஆணையிடும் அதிகாரமுள்ள அதிகாரிகளாக இணைந்து கொண்டனர். இவர்களுக்கான ஆணையை இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விமானப்படைத் தளபதி எயர் மாஷல் ஜி.டொனால்ட் பெரேரா வழங்கினார்.

பயிற்சியை முடித்து வெளியேறிய 175 அதிகாரிகளில் 10 பெண் அதிகாரிகளும். 33 தொண்டர்படை அதிகாரிகளும், 2 மாலை தீவு இராணுவ அதிகாரிகளும், 24 நிரந்தரப் படைப்பிரிவுகளின் அதிகாரிகளும் அடங்குவர். இவர்கள் தலைமையில் இரத்மலானையில் உள்ள கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் பட்டப்படிப்புக்களை முடித்துக் கொண்டவர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை விட இராணுவத்தைச் சேர்ந்த மேலும் 56 அதிகாரிகளும் பயிற்சியை முடித்து ஆணையிடும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், முப்படைகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் பயிற்சி முடித்து வெளியேறும் படையினரின் உறவினர்கள் எனப் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர்.



இலங்கை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்து கடந்த சனிக்கிழமையன்று வெளியேறிய இராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட, எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிப்பு தொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்தி பொய்யானது!

### ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு இறுதிவரை நீடிக்கப்படவுள்ளது என ஊடகங்களில் வெளியான செய்திக்கு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மறுப்புத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருப்பதாக, வெளிவந்த செய்திகள் தொடர்பில் எந்தக் கருத்தையும் கூறமறுத்த ஹரீம் பீரிஸ் தற்போதைய நிலைமை தொடரும் என்றும் குறிப்பிட்டார்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதன்முறையாக தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் 2000 ஆம் ஆண்டுடன் அவரின் பதவிக்காலம் முடிவடைந்தது.

1999 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்றபோது, ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றார்.

வெற்றிபெற்ற பின்னர் ஜனாதிபதி 2005 ஆம் ஆண்டு வரைக்குமே தனது பதவிக்காலம் என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் மீண்டும் ஜனாதிபதி - பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன்னிலையில் இரகசியமாக 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதிவரை தனது பதவி நீடிக்கும் என்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாகவே ஹரீம் பீரிஸ் எந்த விதமான கருத்தையும் கூறமாட்டார் என்று தெரிவித்தார்.

இதேவேளை, 2005 ஆம்ஆண்டு இறுதி வரைதான் ஜனாதிபதியின் பதவிக்காலம் இருப்பதாகவும், அவர் இரகசியமாக் ஒருபதவி பிரமாணத்தை செய்திருந்தால் அந்த பதவிக் காலத்தில் தமது ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஜனாதிபதியின் எந்தவொரு கட்டளையையும் பின்பற்றாது என, ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மக்கள் நடமாட்டம் அதிகமான இடங்களில்

# ஆயுதங்களுடன் இராணுவத்தினர் நடமாடுவதைத் தடை செய்யவும்!

## யாழ்.படைத்தளபதியிடம் கோருவதற்கு தீர்மானம்

மக்கள் நடமாட்டம் அதிகரித்த இடங்களில், இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடை செய்யுமாறு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கு அழுத்தம் கொடுப்பதற்கு, இலங்கை மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய, யாழ். மாவட்டக் கிளை தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மனித நேய அமைப்புக்களின் யாழ். மாவட்ட உத்தியோகத்தர் இ.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், 15 இற்கு மேற்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மேலும், கடந்த மாதம் யாழ்.பஸ் நிலையப் பகுதியில் பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த சிறுவன் மீது - இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் - மனித உரிமை மீறல் என்றும், அதற்கெதிராகத் தமது கண்டனத்தை - புதிய யாழ்.மாவட்ட இராணுவத்தளபதிக்கு தெரிவிப்பது என்றும், பொதுமக்கள் அதிகமாக கூடும் ஆலயங்கள், பொதுச் சந்தைகள், வைத்தியசாலைகள் ஆகிய இடங்களில் இராணுவத்தினர் ஆயுதத்துடன் நடமாடுவதை தடை செய்ய வேண்டுமெனக் கோருவதற்கு முடிவு செய்யப்பட்டது. அத்துடன், பொது மக்கள பிரயாணம் செய்யும் வாகனங்களில் ஆயுதங்களுடன் இராணுவத்தினர் பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனவும் இராணுவத்தளபதியிடம் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில், இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் - அடிப்படை வசதிகள் எற்படுத்திக்கொடுக்காமை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (ச)




வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு - யு.என்.எச்.சி.ஆரினால் வழங்கப்பட்ட பத்து இலட்சம் ரூபாவிலும், வைத்தியசாலை அபிவிருத்தி நிதியிலிருந்தும் புனரமைக்கப்பட்ட கட்டட திறப்பு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கே.ரி. சிவபாதம் உரையாற்றுவதையும், அருகில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வைத்திய கலாநிதி க.மயிலேறும் பெருமாள், யு.என்.எச்.சி.ஆர் இணைப்பதிகாரி நில்றைட், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி ஆகியோரைப் படத்தில் காணலாம். (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : ம.மதுமிதன்
முகவரி : ஸ்ரீ கணேச வாசம், வதிரி.

ஏழாவது அகவையில்



பெயர் : சு.தர்ஷினி
முகவரி : 84/2 பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை.

ஏழாவது அகவையில்



பெயர் : பா.வத்சலா
முகவரி : கனுக்கேணி மேற்கு, முள்ளியவளை.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ர.ரகுராம்
முகவரி : சரஸ்வதி வாசம், வதிரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------
----------------------------
முகவரி :--------------------
----------------------------
பிறந்த ஆண்டு:---------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
--------------
பெற்றோர் ஒப்பம்


# இலங்கை மனிதநேய அமைப்பினால் சமூக பாதுகாப்பு குழுக்கள் அமைப்பு

இலங்கை மனிதநேய அமைப்பினால் - சமூக பாதுகாப்புக் குழுக்கள் கிராமம் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழுவில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவினர் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவுள்ளதுடன், கிராம மக்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான அறிவினை வளர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடவுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள பதினைந்து பிரதேச செயலகங்களில் இருந்தும் ஒவ்வொரு கிராமத்தை மாதிரிக் கிராமமாகத் தெரிவுசெய்து, அங்கு இந்தக குழு தனது பணிகளை முன்னெடுத்துச் செல்லும். அதிகளவில் மனித உரிமை மீறல்கள் நடைபெறும் கிராமங்களே மாதிரிக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்படவுள்ளதாவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிவதற்கான ஆய்வு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களின் விபரங்களும், அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களும் தற்போது சேகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதேவேளை, மீளக்குடியமர்ந்த மக்களில் பெரும்பாலானோருக்கு, அரசினால் வழங்கப்படும் உதவிகள் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளை அடுத்து, அது தொடர்பான விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கையிலும் இலங்கை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் ஈடுபட்டுவருகிறது.

தற்போது வலிகாமப் பிரதேசம் தொடர்பான விபரங்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய பிரதேசங்களின் விபரங்கள் மிகவிரைவில் சேகரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் இலங்கை மனிதநேய அமைப்பு ஒன்றிய யாழ் - மாவட்ட உத்தியோகத்தர் பகீரதன் தெரிவித்தார். (ச)

## சின்னஞ்சிறு செய்திகள்

### எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

இன்று மாலை 2 மணிக்கு யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில், நல்லூர்க் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு, கோட்டக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### எம்.ஜி.ஆர். நினைவு நாள்

மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரனின் 16 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு - இன்று, புத்தூர் மேற்கு கலைமதி பிரதேசத்தில் நடத்தப்படவுள்ளது.

இதில் எம்.ஜி.ஆரின் நினைவுச் சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள் என்பனவும் நடைபெறவுள்ளதுடன், நண்பகல் அன்னதானமும் வழக்கப்படவுள்ளது. (128)

### சவுக்கு மரங்களை வெட்டுவதற்கு தடை

தற்போதய பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சவுக்கு மரங்களை மக்கள் வெட்டி வருகின்றனர்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் மக்களை ஈடுபடவேண்டாம் என யாழ்.மாவட்ட வனவளப்பாதுகாப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

### தொண்டர்களுக்கு சீருடைகள்

யாழ். மாவட்ட தீயணைப்பு படையினர் சேவையிலுள்ள தொணடர்களுக்கான சீருடைகள் வந்துள்ளன.

கடந்த வாரம் முதல் இந்தத் தொண்டர்கள் - தமது சீருடையைப் பெற்று, அதனைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதாக யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ப)

### கைதடி - நாவற்குழியில் சனசமூக நிலையம் திறந்துவைப்பு

'அம்டா' நிறுவன அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சனசமூக நிலையமொன்று கைதடி - நாவற்குழி தெற்கில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தை அம்டா நிறுவன திட்டப்பணிப்பாளர் சிய் யொசிமி திறந்துவைத்தார்.

நிலைய தலைவர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பல முக்கியஸ்த்தர்களும் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர். அம்டா நிறுவனம் - ஜப்பானிய அரசினதும், அந்த நாட்டு மக்களினதும் அனுசரணையுடன் இந்த நிறுவனத்தை அமைத்துக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறுமியுடன் சேஷ்டை புரிந்தவரை பொலிஸார் கைது செய்தனர்

## இலுப்பையடிச் சந்தியில் சம்பவம்

பன்னிரண்டு வயது சிறுமியுடன் பாலியல் சேட்டைபுரிய முயன்ற இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை பலாலி வீதி இலுப்பையடிச்சந்திப் பகுதியில் இடம்பெற்றது. ரியூசன் வகுப்பிற்குச் செல்வதற்காகச் சிறுமி சைக்கிளில் சென்றுகொண்டு இருந்தவேளை, அந்த வீதியால் வந்துகொண்டிருந்த இளைஞர் - தகாதவார்த்தைகள் பேசி, சிறுமியுடன் தகாத நடத்தையில் ஈடுபடமுயன்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமியுடன்கூட வந்த அவரது உறவினர், இது குறித்து வீதியில் கடமையில் இருந்த பொலிஸாரிடம் தெரியப்படுத்தியதையடுத்து, பொலிஸார் குறித்த இளைஞனை வழிமறித்து, விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போது, சிறுமியும் சம்பந்தப்பட்ட இளைஞர் தன்னிடம் நடந்துகொண்ட விதம்பற்றி, பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இதனை அடுத்து, குறித்த இளைஞர், சிறுமி மற்றும் சிறுமியின் உறவினர் மூவரையும் ஆட்டோ ஒன்றின் மூலம் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பொலிஸார் - விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞரைத் தடுத்து வைத்தனர். இவர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க

# முன்னாள் செயலாளருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

வடபகுதியில் கைதாகிக் காணாமல்போனோர் சங்கத்தின் முன்னாள் செயலாளருக்கெதிராக, காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத்தினால் உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டுவரை வடபகுதியில் கைதாகிக்காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு, காணாமற்போனோர் சங்கத்தின் முன்னாள் செயலாளராக இருந்த ஒருவர் மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

கைதாகிக் காணாமற்போனோர் பற்றிய சரியான விபரங்கள் தெரியாமலும், சுயவிருப்பத்தினடிப்படையிலும் அவர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையைக் கண்டித்தே இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

அப்பாவி இளைஞர்கள் காணாமல் போயிருக்கும் நிலையில், அவர்களைத்தேடிக் கண்டுபிடிக்கவோ, அவர்களைப்பற்றித் தகவலறியவோ முயற்சிக்காது எடுக்கப்பட்ட இந்தத் தான்தோன்றித்தனமான செயல் - பலரைப் பாதிக்கச்செய்துள்ளது.

அதேவேளை, அவ்வாறு மற்றவரகளுக்கு மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுத்துள்ள அவர், தனது பிள்ளை காணாமல் போய் 8 வருடங்களாகியும், இன்னமும் அதற்கான மரணச் சான்றிதழைப் பெற்றுககொள்ளவில்லை. மற்றவர்களின் மன உளைச்சல்களைப் புரிந்துகொள்ளாமல் எடுக்கப்பட்ட இந்தச் செயல், மிகவும் கணடனத்திற்குரியது எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ப)

### ஆண்டு விழா

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவும் 16 ஆவது சான்றிதழ் வழங்கலும் சிறப்பு மலர் வெளியீடும் எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கழகத்தலைவர் குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# விபரணப் புள்ளிவிபரவியல்

L.S.ஜெகன்-
B.A(Hons).Geo.Spl

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**மீடிறன் பரம்பல் - Frequency Distribution**

மாதிரிகளின் பெறுமதியினையும், அவதானிப்புக்களின் எண்ணிக்கையினையும் காட்டுகின்ற ஓர் அட்டவணையே மீடிறன் பரம்பலாகும். அதாவது, பச்சைத்தரவுக் கூட்டமொன்றினை வகுப்பாக்கல், அட்டவணையாக்குதலுக்கு உட்படுத்துவதாகும்.

மீடிறன் எனப்படுவது மாறிப்பெறுமானம் ஒன்று மீள மீள ஒரு தரவுக் கூட்டத்தில் வருகையில் இம் மீள்வரல் திறனை ஒவ்வொரு பெறுமானத்திற்கும் கணக்கிட வேண்டியுள்ளது. மாறியின் பெறுமானத்தை இவ்வாறு கணக்கிட்டுத்தான் அறியவேண்டும். இது மீடிறன் என வரையறுக்கப்படுகின்றது.

மீடிறன் பரம்பல்களை இரு வகைப்படுத்தலாம்.

1. எளிய முறை மீடிறன் பரம்பல்
   Simple Frequency Distribution
2. தொகுக்கப்பட்ட முறை மீடிறன் பரம்பல்
   Grouped Frequency Distribution

தொகுக்கப்பட்ட மீடிறன் பரம்பல்களின் பயன்பாடு

- பெருமளவு தரவுகளை செறிவான வகையில் சுருக்கமாகக் காட்டுதல்.
- வீச்சு, சராசரி, ஒரு புள்ளிவிபரப் பரம்பலில் (சிதறல், பரம்பல், சராசரி, வீச்சு) என்பவற்றையும் புள்ளியியல் பரம்பலின் வடிவத்தினையும் உணர்ந்துகொள்ள முடிகின்றமை.
- குடித்தொகையின் நிகழ்தகவினை விளங்கிக்கொள்ள உதவுகின்றமை.

**வகுப்பாயிடை (Class Interval)**

வகுப்பாக்கலில் உள்ள முக்கிய கூறு வகுப்பு ஆகும். தொடர்ச்சியாகவுள்ள மீடிறன் பரம்பல்கள் தொடராகவுள்ள மீடிறன் பரம்பல்கள்மூலம் அமைக்கப்படுகின்றன. ஒரு வகுப்பின் மேல் எல்லையும் அடுத்த வகுப்பின் கீழ் எல்லையும் சமமாக இருக்கும். ஒவ்வொரு வகுப்பினுள்ளும் வரும் உறுப்புகளின் எண்ணிக்கை வகுப்பு மீடிறன் (Class Frequency) எனப்படும்.

**வகுப்புப் புள்ளி (Class Mark)**

ஒவ்வொரு வகுப்பினையும், குறித்துக் காட்டுவதாக அதன் மத்திய பெறுமானம் (Mid Mark) எடுத்துக் கொள்ளப்படும். ஒரு துணைத் தரவாகவுள்ள மீடிறன் பரம்பலில் ஒரு வகுப்பிலுள்ள புள்ளி விபரங்களின் எண்ணிக்கை மட்டுமே தெரியக்கூடியதாக இருக்கும். ஆனால், அப்புள்ளி விபரங்களின் பெறுமானங்கள் தனித்தனியாக தெரியாதவையாக அமைந்திருக்கும். இந்த நிலையில் இம்மத்திய பெறுமானம் வகுப்புப் புள்ளியாக எடுக்கப்பட்டு தொடர்ந்து வரும் கணிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்படும். வகுப்புப் புள்ளிவிபரங்களின் சராசரியாகவும் இது எடுத்துக் கொள்ளப்படும்.

**வரவுக்குறி (Tally Mark)**

பச்சைத் தரவுக்கூட்டத்திலுள்ள ஒவ்வொரு புள்ளி விபரமும் நீக்கப்பட்டு வரவுக்குறி மூலம் மீடிறன் அட்டவணையில் இரண்டாவது நிரலில் இடப்படுகின்றது. நான்கு புள்ளிவிபரங்கள் நிலைக்குத்துக் கோடுகளாலும் ஐந்தாவது கோடு குறுக்குக் கோடு ஒன்றினாலும் கீறப்பட்டு படலைக்குறி மூலம் இவ்வரவுக்குறி அமைக்கப்படுகின்றது.

**வீச்சு (Range)**

மீடிறன் பரம்பலொன்று அமைக்கப்படுவதற்கு முன்னர் தரவுக் கூட்டத்தின் வீச்சு அறியப்படும். தரவுத் தொகுதியிலுள்ள உயர்வு இழிவுப் பெறுமானங்களின் வித்தியாசம் அத்தொகுதியின் வீச்சு என வரையறுக்கப்படும். இது வரையறுக்கப்பட்ட பின்னரே வகுப்பாயிடைகள் அமைக்கப்படுகின்றன.

**மீடிறன் பரம்பல் ஒன்றினை அமைத்தல்
(Construction of a Frequency Distribution)**

பச்சைத் தரவுக் கூட்டங்களுக்குரிய மீடிறன் பரம்பல் ஒன்றினை அமைக்கும்போது, பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

1. வகுப்பாயிடைகளின் எண்ணிக்கை (குறைந்தது 6 வகுப்புக்களாவது இருத்தல்வேண்டும் என பொதுவாக குறிப்பிடப்படுகின்றது).
2. வகுப்பாயிடைகளின் அகலம்.

$$W = \frac{R}{N}$$

3. வகுப்புகளின் எல்லைகள்

**Eg:- "Booma"** ஆடைத்தொழிற்சாலையின் 25 தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் பின்வருமாறு.

| தொழிலாளர் | சம்பளம் |
|---|---|
| ரொக்ஷி | 200 |
| நிலக்ஷி | 180 |
| விதுஷா | 170 |
| தர்மினி | 190 |
| சுகன்யா | 120 |
| சுதா | 110 |
| கலைச்செல்வி | 100 |
| தமிழரசி | 175 |
| சியாமினி | 160 |
| வத்சலா | 150 |
| சசிகலா | 140 |
| வதனி | 185 |
| மேனகா | 135 |

| தொழிலாளர் | சம்பளம் |
|---|---|
| சங்கீதா | 100 |
| பிரியா | 105 |
| நளாயினி | 155 |
| துஸ்யந்தி | 135 |
| பிரியங்கா | 190 |
| குமிலினி | 120 |
| வேணி | 110 |
| அன்பரசி | 175 |
| சோதியா | 160 |
| தமிழினி | 125 |
| தென்றல் | 135 |
| மகிமா | 150 |

5 வகுப்புக்கள் எனின்,

கூடிய பெறுமானம் = 200 வகுப்பு இடைவெளி $W = \frac{R}{N}$

குறைந்த பெறுமானம் = 100

∴ வீச்சு = 200 - 100 = $\frac{100}{5}$

= 100 = 20

| வகுப்பாயிடை | வரவுக்குறி | மீடிறன் (f) |
|---|---|---|
| 100 - 120 | ~~\|\|\|\|~~ | 05 |
| 120 - 140 | ~~\|\|\|\|~~ \| | 06 |
| 140 - 160 | \|\|\|\| | 04 |
| 160 - 180 | ~~\|\|\|\|~~ | 05 |
| 180 - 200 | ~~\|\|\|\|~~ | 05 |

**திரட்டு மீடிறன் (Cumulative Frequency)**

தரவுக் கூட்டத்தின் இயல்புகளை விளக்குவதற்கு வகுப்பு மீடிறன்கள் தனியே பயன்படுவதில்லை. புள்ளிவிபர வீச்சுக்கள், ஏகவின்வகுப்புக்கள் தொடர்பான பல கேள்விகளுக்கு வகுப்பு மீடிறன்களைக் காட்டி விடையளிக்க வேண்டி ஏற்படுகின்றது.

இதனை -

1. கீழினத் திரட்டு மீடிறன்
2. மேலினத் திரட்டு மீடிறன் எனப் பாகுபடுத்தலாம்.

குறைந்த வகுப்பில் இருந்து தொடர்ச்சியாகக் கூட்டி பெறப்படுவது கீழினத் திரட்டு மீடிறன் ஆகும். கூடிய வகுப்பிலிருந்து தொடர்ச்சியாகக் கூட்டிப் பெறப்படுவது மேலினத் திரட்டு மீடிறன் ஆகும்.

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்






# மாணவர் மலர்



**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக
தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004**




முதலாம் இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உரு யாது?

01. அழகு - மென்மை - சுவை

(1) (2) (3)

02. பாயக்கூடியது - கடிக்கக்கூடியது - உண்ணக்கூடியது

(1) (2) (3)

03. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்யவேண்டிய கருமங்களின் ஒழுங்கிய தொகுதி எது?
1. நித்திரை விட்டெழுதல், காலைக்கடன்கள் முடித்தல், உணவு உண்ணல், பாடசாலைக்குப் புறப்படல்.
2. நித்திரை விட்டெழுதல், காலைக்கடன்களை முடித்தல், பாடசாலைக்குப் புறப்படல்.
3. உணவு உண்ணல், குளித்தல், காலைக்கடன்களை முடித்தல்.

கீழே தரப்பட்டுள்ள இரு பாடல்களையும் வாசித்து, இல. 4 முதல் - 15 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| வெள்ளைக் கொக்கு ஒன்று வந்தது | எல்லையற்ற கோபத்தோடு |
| மீனைக்கொத்திப் பார்த்தது | இன்னும் கொக்கு முயன்றது |
| துளளித் துள்ளி மீனும் ஓடித் | கல்லில் துள்ளி வழுந்த மீனைக் |
| தூரப்பாய்ந்து போனது. | கௌவிக்கொண்டு பறந்தது. |

04. இந்தப்பாடலில் குறிப்பிட்ட பறவை எது
1. காகம் 2. கொக்கு 3. மீன்

05. பாடலில் உள்ள அடுக்குத் தொடர் எது?
1. துள்ளித் துள்ளி 2. கொத்தி கொத்தி 3. கௌவிக் கௌவி

06. தூரப்பாய்ந்து போனது எது?
1. கொக்கு 2. காகம் 3. மீன்

07. கல்லில் விழுந்த மீனைக் கௌவியது எது?
1. நாரை 2. கொக்கு 3. காகம்

பின்வரும் சொற்களைப் பன்மையில் எழுதுக
08. மீன் ..............................
09. கல்லில்..............................
10. ஊன் உணவு உண்ணும் பறவை ஒன்றின் பெயரை எழுதுக.

ஒத்த கருத்துள்ள சொல் தருக
11. கோபம் .................. 12. தூரம்......................
13. துள்ளித்துள்ளி ஓடியது எது?

பின்வரும் பந்தியை வாசித்து, இல. 14 முதல் 21 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இப்போது கேட்பது இரண்டாவது வெடிச்சத்தமாகும். வெடிச்சத்தம் எந்தத்திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து பிரிந்து ஓடிவந்து இங்கு ஒளித்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயப்பட்டது. இரத்தம் பாய்கின்றது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடி பட்டதா? தந்தை வெடித்தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்து கொள்வதற்கு முடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும் பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித்திரியும் முறைபற்றியும், பகைவர்களிடமிருந்து தப்பும் முறைபற்றியும், தந்தை எப்போதும் எனக்குச்சொல்லித் தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின் வெடிக்கு இரையாகிவிட்டார்.

14. இப்போது கேட்பது எத்தனையாவது வெடிச்சத்தமாகும்?
15. இந்தப் பந்தியில் உள்ள பிள்ளையின் கவலை நிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

எதிர்க்கருத்துச் சொல் தருக
16. பயம் ...................... 17. பகைவர்...................

பிரித்தெழுதுக
18. தந்தையிலிருந்து .....................+.......................
19. வெடித்தாக்குதலால்...................+....................
20. தந்தை நமக்கு எதனை எப்பொழுதும் சொல்லித்தருவார்?
21. தந்தை இன்று எதற்கு இரையாகிவிட்டார்?
22. எனது எந்தக் கால் காயப்பட்டது?
23. ஒளித்துள்ளேன் என்பது எந்தக்காலத்தை உணர்த்துகிறது.?

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.


எனது தொலைபேசி இலக்கம் 506335 ஆகும். நான் ஒரு வைத்தியராக கடமையாற்றுகிறேன். எனது பிள்ளைகள் இருவர் வெளிநாட்டில் படிக்கிறார்கள். அவர்கள் நம்முடன் தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி உதவுகிறது.

24. தொலைபேசி இலக்கத்திலுள்ள O இன் இடப்பெறுமானம் யாது?
25. தொலைபேசி இலக்கத்திலுள்ள மொத்தப்பெறுமானம் யாது?

பின்வரும் சொற்களை ஆங்கில மொழியில் எழுதுக.

26. தொலைபேசி 27. வைத்தியர்
28. பிள்ளைகள் 29. எனது

30. இந்த எண்சட்டம் காட்டும் எண் - சரியான விடையின் கீழ் கோடிடுக.




1. 2232 2. 2032 3. 2043


31. 3000 என்ற எண்ணுக்கு முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் தெரிவு செய்க.
1. 3000, 3001 2. 2998, 3002 3. 2999, 3001

32. இவ்வெண்கோலத்தில் வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.
19,16,13,10, ......., ......
1. 11,10 2. 8,6 3. 7,4

33 ஆம் 34 ஆம் வ்னாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில், வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்கள் யாவை?

33.
```
  4 5 7        1. 1     2. 2     3. 1
- 3 — 4           3        3        6
  1...3
```

34.
```
  8 4 6        1. 5     2. 4     3. 5
+ 1 — 2           5        6        9
  9...8
```




35. இந்தப் படங்களில் உள்ள தாவரங்களின் பெயர்களை ஆங்கில எழுத்தில் எழுதுக.

36. இந்தப் படங்களில் உள்ள விலங்குகளின் பெயரை எழுதுக.

37. இந்தப் படங்களில் உள்ள மனிதரின் ஆக்கங்களை எழுதுக.

38. ஆகாயமார்க்கமூலம் பயணம் செய்ய உதவும் வாகனம் படத்தில் உள்ளது அது எது?

39. D என்ற படத்தில் உள்ள பழத்தில் என்ன உயிர்ச்சத்து காணப்படுகிறது?

40. இயற்கையாகக் காணப்படும் பொருளை படத்தைப் பார்த்து எழுதுக.

கீழே தரப்பட்டுள்ள விபரத்தை வாசித்து இல. 41 முதல் 48 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> டெங்கு வீட்டுக்கு வீடு பரவுகிறது. இம்முறை டெங்கு கொழும்பு பிரதேசத்திலேயே அதிக அளவில் பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நுளம்புகளை விரட்டுவதற்கும், அழித்தொழிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் பல்வேறு பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். மாரி காலத்துடன் டெங்கு நுளம்புகள் தொழிற்படத் தொடங்குகின்றன. டெங்கு ஒழிப்பிற்காக விசேட செயலணியும் அமைக்கப்பட்டுள்ளது.
>
> காய்ச்சலுடன் தோலில் சிவப்பு, புள்ளிகள் ஏற்படுதல் டெங்கின் அறிகுறியாகும். கியூபாவில் அடிக்கடி வீடுகளைப் பரீட்சித்து அறிக்கைப்படுத்துவதற்கு குழுவொன்றினை அமைப்பதன்மூலம் டெங்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டது. சிங்கப்பூரில் குப்பை கூழங்களைக் குவிப்பவர்களுக்கு அபராதம் விதிப்பதன்மூலம் டெங்கு கட்டுப்படுத் தப்பட்டது.

41. இம்முறை டெங்கு எங்கு பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

42. டெங்கு நுளம்புகள் எப்போது தொழிற்படத் தொடங்குகின்றன?

43. டெங்கு நோயின் அறிகுறி யாது?

44. சிங்கப்பூரில் டெங்கு நோய் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது?

கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல் தருக.

45. வீடு .................. 46. அபராதம் ..................

கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்கருத்துச் சொல் தருக.

47. அழித்தல் .................. 48. மாரி ..................

மேலேயுள்ள பந்தியிலுள்ள உயர்திணைச் சொல் இரண்டு தருக.

49. .................. 50. ..................

இவ்விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வினைமுற்றுக்கள் இரண்டு தருக.

51. .................. 52. ..................

மேலுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நாடுகளின் பெயர்களை எழுதுக.

53. .................. 54. ..................

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில்) தருக.

55. பெற்றோர் .................. 56. சிவப்பு ..................

57. காய்ச்சல் .................. 58. பிள்ளைகள் ..................

கீழே தரப்பட்டுள்ள கடிதத்தினை வாசித்து இல. 59 முதல் 66 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

> பூங்கா வீதி,
> திருநகர்.
>
> அன்புள்ள பாரி,
>
> அண்மையில் ஒரு நாள் நான் பொதுநூலகத்தில் புத்தகமொன்றைக் கண்ணுங்கருத்துமாக வாசித்துக்கொண்டிருந்தபோது, நிர்மலன் அங்கு வந்தான். என்ன ஆச்சரியம். அவன் என்னோடு கதைத்தான். விளையாடுவதற்கு நல்ல மைதானம் ஒன்று அங்கிருப்பதாகக் கூறினான். வருகின்ற ஞாயிற்றுக்கிழமை நிர்மலனின் வீட்டுக்கு நான் போகின்றேன். உனக்குத் தெரிந்த எனது சித்தப்பாவின் மகனான வாகீசனும் அங்கு வருவதாகக் கூறினான். நீயும் அங்கு போவதற்கு வா.
>
> இப்படிக்கு,
> அன்புள்ள, மோகன்.

59. கடிதம் எழுதும்போது இடம்பெற வேண்டிய முக்கிய அம்சம் ஒன்று இல்லை. அது யாது என எழுதுக.

60. இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது?

61. இங்கு காணப்படும் இணைமொழித் தொடர் ஒன்றை எழுதுக?

62. பொதுநூலகப் புத்தகத்தை மிகவும் கவனமாக வாசித்தவன் யார்?

63. நிர்மலனின் வீட்டுக்கு மோகன் எப்போது போவதாக கூறினான்?

64. மோகன் சித்தப்பாவின் மகனின் பெயர் என்ன?

ஒத்த சொல் தருக

65. அண்மை.................. 66. மகன் ..................

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

67. HOUSE .................. 68. PLAY ..................

69. LIBRARY .................. 70. SUNDAY ..................

இல. 71 முதல் 80 வரையுள்ள வினாக்களின் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

71. நீலச் சாயத்துடன் சிவப்பு சாயத்தைக் கலப்பதால் ஊதா நிறத்தைப் பெறமுடியும். ( )

72. மீன் பூவினால் சுவாசிக்கிறது. ( )

73. பருத்தி காற்றினால் பரவிப் பெருகும் தாவரமாகும். ( )

74. நிழல் மத்தியானம் 12 மணிக்கு மிக நீண்டதாக இருக்கிறது. ( )

75. உலோகப் பொருட்கள் வெப்பத்தை கடத்துவதில்லை. ( )

76. வெண்புறா சமாதானத்தின் சின்னமாக கருதப்படுகிறது. ( )

77. அடிப்படைத் திசைகளில் ஈசானமூலையும் ஒன்றாகும். ( )

78. துணித்துண்டுகள் இரண்டைப் பொருத்துவதற்கு பயன்படுத்துவது சங்கிலித் தையலாகும். ( )




79. இன்று சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்கு ரூபா 4.00 சத முத்திரைகளை ஒட்டவேண்டும். ( )

80. குறிஞ்சாய் ஒரு மேவோட்டித் தாவரமாகும். ( )

81. மழைமானி அமைப்பைச் சரிவரக் காட்டும் உரு எது?



இல. 82 தொடக்கம் 85 வரையுள்ள வினாக்களில் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?

82.  83.  84.  85. 

(தொடரும்....)

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்



# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை - 2004

# அளவையியலும் விஞ்ஞான முறையும்

## பகுதி 2

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஆ. 1. அவன் ஆசிரியனும் பாடகனும் என்பது பொய் என்ற வாகியத்திற்கு தர்க்க ரீதியாக சமனான குறியிட்டு வாக்கியம் ஒன்றைத் தருக. அவை உண்மை அட்டவணையில் சமனானது என நிறுவிக்காட்டுக.

2. ஒன்றில் அந்த நாடு அபிவிருத்தி அடைந்த நாடாகவோ அல்லது வளர்முக நாடாகவோ இல்லை என்ற வாக்கியத்திற்கு முரணான குறியீட்டு வாக்கியம் ஒன்றைத் தருக. அவை முரணானவை என உண்மை அட்டவணை நேர்முறையில் சோதிக்குக.

இ. கீழே தரப்பட்ட சுருக்கத் திட்ட திட்டத்தைப் பயன்படுத்தி குறியீட்டு வாக்கியங்களை தமிழில் தருக.

**P** - செவ்வாயில் உயிரினங்கள் உள்ளன.
**Q** - புதனில் எரிமலைகள் இருக்கின்றன.
**R** - வியாழனில் வாயுக்கள் இருக்கின்றன.

**I.** $[(-P\wedge-Q)\rightarrow R]\leftrightarrow(P\vee-Q)$
**II.** $[R\leftrightarrow-(P\vee-Q)]$

ஈ. பெறுகைமுறையில் பயன்படுத்தப்படும் பின்வரும் விதிகளை உதாரணத்துடன் விளக்குக?

1. இருபால் நிபந்தனை விதி
2. மறுத்து விதித்தல் விதி

உ. அவன் படகில் சென்றான் என்பதுடன் காரில் சென்றான் எனத் தரப்படின் ஒன்றில் வைத்தியசாலைக்கு செல்லவில்லை அல்லது பாடசாலைக்குச் செல்லவில்லை என்ற இக் கூற்றானது எப்போது பொய்யாக அமையும் என விளக்குக.?

06.அ. பின்வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து நேரல் முறையைப் பயன்படுத்தி கீழ்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

1. சமாதானம் சம்மந்தமான விவாதம் ஒன்றில் **A, B** என்ற இருவர் கூறிய கருத்துக்கள்

**A** - இந்தியா சமாதானத்தை மீறும் ஒன்றில் பாகிஸ்தான் அல்லது நோர்வே சமாதானத்தை விரும்பும்.

**B**- இந்தியா சமாதானத்தை மீறவில்லை ஆயின் ஆயினே பாகிஸ்தான் சமாதானத்தை விரும்புவர் என்பதுடன், நோர்வே சமாதானத்தை விரும்பவில்லை. விவாதத்தின் இறுதியில் **A** உணமைசொல்வதாகவும் **B** பொய்சொல்வதாகவும் தெரியவந்தது. இதற்கிணங்க இந்தியா, பாகிஸ்தான் நோர்வேயின் சமாதானம் பற்றி என்ன முடிவுக்கு வரலாம்?

2. இலங்கையில் வெப்பம் அதிகரித்தல்பற்றி, இரு சுற்றாடல் விஞ்ஞானிகள் தமது கருத்துக்களை பின்வருமாறு வெளியிட்டனர்.

**A** என்ற விஞ்ஞானியின் கருத்து - அடுத்த வருடம் இலங்கையின் வெப்பம் $5^{o}F$ களால் அதிகரிக்குமாயின் இலங்கையின் கரையோரம் நீருள் மூழ்கும்.

**B** என்ற விஞ்ஞானியின் கருத்து - ஒன்றில் அடுத்த வருடம் இலங்கையின் வெப்பம் $5^{o}F$ களால் அதிகரிக்காது அல்லது இலங்கையின் கரையோரம் நீரில் மூழ்காது.

இவ்விரு விஞ்ஞானிகளின் கருத்துக்களும், உண்மை எனின் இலங்கையின் வெப்ப அதிகரிப்பு பற்றி எடுக்கக்கூடிய முடிவு என்ன?

ஆ. குறியீட்டு அளவையியல் அறிவைக்கொண்டு இப்பிரச்சினையைத் தீர்க்க.

ஒரு சம்பாசனையில் நிரோஷ், சிறி கீழ்வருமாறு கருத்துக்கூறினர்.

நிரோஷ்: உல்லாசப்பயணிகள் அல்லது ராஜதந்திரிகள் இலங்கைக்கு வருவர்.

சிறி: உல்லாசப்பயணிகளும் இலங்கைக்கு வரார், இராஜதந்திரிகளும் வரார்.

1. இருவரின் கருத்துக்களையும் குறியீட்டாக்கம் செய்க.
2. இவ்விருவரின் கருத்துக்களில் அழகன் கலாசாரம் சீரழியும் என அனுமானித்தான் அவனது அனுமானம் வலிதானதா?
3. இருவரின் கருத்தும் உண்மையாக வரமுடியுமா?
4. இவ்விருவரின் கருத்தும் ஒன்றுக்கொன்று சமனா அல்லது முரணா?

இ. பின்வரும் வாதத்தை குறியீட்டில் அமைத்து அவை வலிதானதா என்பதை உண்மை அட்டவணையின் நேர்முறையிலே சோதிக்குக.

1. ஜிந்தா நேர்மையானவன் எனின் அன்புடையவன் எனத்தரப்படின் அவன் அன்புடையவன். அவன் அன்புடையவன் எனின் நேர்மையானவன். ஜிந்தா நேர்மையானவன்.

07. பின்வரும் வாதங்களை குறியீட்டில் அமைத்து அவை, வலிதானதா வலிதற்றதா என்பதை எடுகூற்றுக்களிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் காட்டுக.

1. இலங்கை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றால் தென்னாபிரிக்கா வெற்றி பெறவில்லை என்பதுடன் தென்னாபிரிக்கா கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றால் இலங்கை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெறவில்லை. இலங்கை, இந்தியா ஆகிய இருநாடுகளில் ஒரு நாடு மட்டுமே வெற்றி பெற்றுள்ளது என்பதை இது கூறுகின்றது.
2. மனிதன் செவ்வாய்க்குச் சென்றால் மட்டுமே உயிரினங்களை காணலாம் என்பது பொய் மனிதன் செவ்வாய்க்குச் செல்லலாம் ஆகவே உயிரினம் இல்லை.
3. அன்பு அல்லது அறிவு நிலையானது எனின் மனித நேயம் வாழும். மனிதநேயம் வாழ்ந்தால் உலகம் நிலைக்கும். ஆகவே அன்பு நிலையானது எனின் உலகம் நிலைக்கும் அல்லது அழிவடையும்.

ஆ. பின்வரும் வாதங்களை பெறுகை முறையில் நிறுவுக.

1. $[(P\wedge Q)\rightarrow R] \therefore [-R\rightarrow(-P\ -Q)]$
2. $(P\rightarrow Q)\rightarrow(R\wedge S) \therefore (-R\rightarrow-Q)$

இ. பின்வரும் குறியீட்டு வாதத்தை நிபந்தனை நேர்ப்பெறுகை, நிபந்தனை நேரல்பெறுகை என்பவற்றின் மூலம் நிறுவிக்காட்டுக.

1. $(P\rightarrow Q).\ (Q\rightarrow R).\ \therefore(P\rightarrow -R)$

08.அ. 1. அளவையியலின் தேற்றத்தின் பயன்பாடுகளை உதாரணங்கள் தந்து விளக்குக?

2. நீர் அறிந்த யாதாயினும் இரண்டு தேற்றங்களைத் தந்து அவற்றைப் பெறுகைமுறையில் நிறுவிக்காட்டுக.

3. பின்வரும் தேற்றங்களை பெறுகைமுறையில் நிறுவிக்காட்டுக.

1. $(-P\wedge-Q)\rightarrow(R\rightarrow Q)$
2. $(P\wedge Q)\rightarrow(p\leftrightarrow Q)$

ஆ. வாதம் ஒன்றின் அளவையியல் வடிவம் என்றால் என்ன என்பதை உதாரணம் தந்து விளக்குக.

இ. பின்வருவனவற்றுக்கு உதாரணம் தருக?

1. உண்மையான எடுகூற்றையும், உண்மையான முடிவையும் கொண்ட வலிதான வாதம் ஒன்று தருக?
2. பொய்யான எடுகூற்றையும், பொய்யான முடிவையும் கொண்ட வலிதற்ற வாதம் ஒன்று தருக? (தொடரும்...)

P.கமல் B.A.(Cey) Sp/trd Com.
யாழ். இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு*
*அல்லவை செய்தொழுகும் வேந்து.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படும் அத்துருகிரிய மறைவிட விவகாரம்

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இராணுவ புலனாய்வுப்பிரிவின் இரகசிய மறைவிடம் சோதனைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் குறித்து, ஜனாதிபதி அமைத்திருந்த விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து பிரதமர், உள்துறை அமைச்சர், முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்களும், இனவாத எதிர்க்கட்சிகளும் தீவிரமாக இயங்கத் தொடங்கியுள்ளனர்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும், கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கால ஊழல் மோசடிகள் உட்பட, அதன் உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும் செய்த சமூகவிரோதச் செயல்கள், அரசியல் அடாவடித்தனங்கள், கொலைகள் உட்பட பல்வேறு குற்றங்களும் புதிய ஆட்சியாளர்களால் அம்பலப்படுத்தப்பட்டு, சில வழக்குகளாகவும் பதியப்பட்டு, விசாரணைகளும் நடத்தப்பட்டமையால் சினமும், வன்மமும் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா இதற்கான அரசியற்பழிவாங்கலொன்றை மேற்கொள்வதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தார் என்பது வெளிப்படையான விடயமே.

ரணில் பொறுப்புக்களை ஏற்று பிரதமரானதும், ஓரிரு மாதங்களிலேயே இந்த மிலேனியம் சிற்றி, இராணுவ ரகசிய நடவடிக்கைகளுக்கான மறைவிட விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

தேர்தல் காலத்தின்போது ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட, அதன் முக்கிய தலைவர்களை கொல்லவோ, அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தவோ திட்டமிட்டு, அதற்கான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொண்ட 'LRRP' என அழைக்கப்படும் 'ஆழஊடுருவித்தாக்குதல் அணியினர்' கொழும்பில் வந்து நிலைகொண்டிருந்த இடம்தான் இந்த மறைவிட வாசஸ்தலமாகும்.

இதன்பின்னணியில், அப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும், அவரது புதல்வர்களும் 'உடத்தலவின்ன படுகொலைகளின் குற்றவாளிகளான அதே புதல்வர்கள்தான' இருந்தார்கள் என்று அப்போதே செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தத்தாக்குதல் அணியில் இராணுவத்தின் துணைப் படைகளாக இயங்கிவந்த சில தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களும் இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த இல்லத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட விடுலைப் புலிகளின் சீருடைகள் இந்த அணியின் சதித்திட்டத்தை வெளிப்படுத்த உதவின. அதற்கு சில மாதங்கள் முன்னர் இந்தக் கும்பலர், விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் சிலரை மறைந்திருந்து தாக்கிக் கொன்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் சீருடைகளை அணிந்து கொண்டு கொழும்பு நகரில் தேர்தல்கால பேரணிகளின் போது ஐக்கிய தேசிய முன்னணித்தலைவர்கள் மீது தாக்குதல்களை நடத்தி பழியை புலிகளின் மீது போடத்திட்டமிட்டிருந்தர்கள் என்பதுதான் உண்மை.

வடக்கிலும், கிழக்கிலும் மட்டுந்தான் இவர்களின் தாக்குதல் இலக்கு இருந்தது என்றால், கொழும்பு நகரின் மையப் பகுதியில் மக்கள் குடியிருப்புத் தொகுதியொன்றில் பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களை களஞ்சியப்படுத்தி ஒரு மறைவிட இல்லத்தை வைத்திருப்பதற்கான தேவை எதுவும் கிடையாது.

ரத்வத்தையின் புத்திரர்கள் அந்த இல்லத்தில் இருந்தவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. எப்படியோ அந்த மறைவிட விவகாரம் சர்ச்சைக்குரியதாய், விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதும கொழும்பில் அந்த மறைவிடத்தை அதாவது இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களுக்கு வெகு தொலைவில் ஏன் வைத்திருந்தார்கள் என்பதற்கான சரியான காரணத்தை இராணுவப புலனாய்வுப் பிரிவால் முன்வைக்கப்படவேயில்லை.

அதன்பின்னர் நடந்த பல சம்பவங்களில், இந்தத் தாக்குதல் அணியைச் சேர்ந்த பலரும், இனங்காணப்படாத நபர்களால் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டார்கள். இவர்களின் கொலைக்கு, அந்தச் சோதனை நடவடிக்கையே காரணமென ஜனாதிபதி தரப்பினரால் கூறப்பட்ட்துடன், அதற்கான விசாரணைகளை மேற்கொள்ள அவரால் - அவருக்கு வேண்டிய விசுவாசமானவர்களை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது.

தற்போது ஜனாதிபதியின் கையில் பாதுகாப்பு அமைச்சு வந்தபின் அந்தக் குழுவின் அறிக்கை வெளியாகி, இப்போது ரணிலைக் குற்றவாளியாக்கும் முயற்சிக்கு - திட்டமிட்ட சதிக்கு காரணியாகியுள்ளது.

ஆழமாக இப்பிரச்சினையை நோக்குவோருக்கு இதன் அடிச்சூடாக இருக்கும் அரசியல் பழிவாங்கல் முனைப்பு தெளிவாகத் தெரியவரும். உண்மையில் தமிழ்மக்களையும் அவர்களின் பாதுகாவலர்களான விடுதலைப் புலிகளையும் இலக்கு வைக்கவும், அவர்கள்மீது அபாண்டமான பழியைப் போடவும் உருவாக்கப்பட்ட இந்த மறைந்திருந்து தாக்கும் இராணுவ அணியின் மறைவிட விவகாரம் பேரினவாதத் தலைமைகளின் அரசியல் மோதல்களுக்கும் காரணமாயுள்ளதுதான் வேடிக்கையாகும்.

## நாடும் நடப்பும்




# கலாசாரத்திற்கு பெயர்போன யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் பரவுவது அதிர்ச்சியான விடயமாகும்!

## தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

கலாசாரத்திற்கும், பராம்பரியத்திற்கும் பெயர் பெற்ற எமது யாழ்ப்பாண மண்ணிலே, எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்கள் பரவுவதை எண்ணும்போது அதிர்ச்சியும், வேதனையும் ஏற்படுகிறது எனத் தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தமிழினி தெரிவித்தார்.

நேற்று யாழ்.இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

இன்று புள்ளிவிபரங்களின்படி - எயிட்ஸ் நோய்த்தாக்கம் அதிகமுள்ள இடங்களில், இலங்கையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இதனைக் கேட்கும்போது அதிர்ச்சியும், வேதனையும் ஏற்படுகிறது. எமது சமுதாயம் பரம்பரை பரம்பரையாக ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு என்பவற்றைக் கட்டிக்காத்து வந்த சமூகம். இத்தகையதொரு சமூகம் மிகக்குறுகிய காலத்திலே வெகுவாகச் சீரழிந்து போய்விட்டது.

குடாநாட்டை அரச படைகள் கைப்பற்றும்போது, தமிழ் மக்களுக்குச் சமாதானத்தின் பெயரில் பரிசொன்றை தரப்போவதாக அறிவித்தார்கள். அவர்கள் அளித்த பரிசுகளில் ஒன்றுதான் எயிட்ஸ். நாற்பதினாயிரம் படையினர் குடாநாட்டை ஆக்கிரமித்துள்ளனர் என்பது இராணுவ ஆக்கிரமிப்பின் நேரடி விளைவாக இருந்தாலும், மறைமுகவிளைவாக மக்களின் மனங்களில் அவர்களது யதார்த்த வாழ்விலே பல பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது.

சமூகவிரோதச் செயல்கள் மலிந்த பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்செயல்கள் மலிந்துபோன மண்ணாக, எமது மண் மாற்றப்பட்டுள்ளது. துஷ்பிரயோகங்கள் என்பது- இராணுவ இயந்திரத்தின் மூலமாக நேரடியாகக் கட்டவிழ்த்து விடப்படுவதல்ல.

நாம் சாதாரணமான மக்கள் கூட்டம் அல்ல. விடுதலையை நோக்கி இயங்கிக்கொண்டிருக்கின்ற சமூகம். எமது கனவுகள், கற்பனைகள் உன்னதமானவை. சுதந்திர போராட்டத்தை முன்னொடுக்கும்போது, எமது மக்கள் பட்ட வேதனைகளின் தாக்கம் ஆழமானவை. எந்த மனிதனாலும் சந்திக்கமுடியாத துயரங்களைகூட எமது மக்கள் தாங்கிக்கொண்டார்கள்

இன்று இந்தியா உலகிலே தனது பெயரை எயிட்ஸ் மூலமாகவே தக்கவைத்துள்ளது. அந்தநிலை, எமது நாட்டுக்கு வருவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. எனவே, எயிட்ஸை கட்டுப்படுத்தும் பணியில் அனைவரும் கைகோர்க்க வேண்டும். எமது மக்கள் இந்நோய் தொடர்பாகச் சரியான விழிப்புணர்வின்றி உள்ளார்கள். அவர்களது முற்றத்திற்கு இந்நோய் வந்துவிட்டது. தற்போது அவர்களது கதவைத் தட்டத் தயாராகவுள்ளது. எனவே, நாம் விழிப்படைந்து எமது அர்ப்பணிப்புமிக்க பணியினால்- இந்நோய் பரவுவதைத் தடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு ஊழியர்களை விடுவிக்குக!

## சுகாதார திணைக்களம் கோரிக்கை

மருதங்கேணி வைத்தியசாலை இயங்குவதற்கு தேவையான ஊழியர்களை விடுவிக்குமாறு அரசாங்க அதிபர் சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிகொட் நிறுவனத்தினால் புனரமைக்கப்படும் இவ் வைத்தியசாலையின் கட்டிடவேலைகள் பூர்தியடைவதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் தேவையென நிகொட் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இருந்தும் எற்கனவே பூர்தியடைந்த சில கட்டிடங்களைக் கொண்டு எதிர்வரும் தை மாதத்தில் வைத்தியசாலை இயங்கச் செய்வதற்கு அரசஅதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதன் பொருட்டே ஏற்கனவே மருதங்கேணி வைத்தியசாலையில் கடமையாற்ற தற்போது வேறு வைத்தியசாலைகளில் கடமைபுரியும் ஊழியர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மருதங்கேணியால் அண்மையில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டம் ஒன்றிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. (122)

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும்

## ஜே.வி.பி.யின் பிரசார செயலர் விமல் வீரவன்ச

நாட்டின் அரசியல் எதிர்காலத்தை மக்கள் தர்மானிப்பதற்காக, பொதுத் தேர்தல் ஒன்று, உடனடியாக நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு ஐ.ரி.என் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் ஜே.வி.பியின் பிரசாரச்செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார். அந்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது இந்த நாட்டு மக்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்துள்ளனர். எனவே தற்போதைய அரசு இது தொடர்பில் பொறுப்புணர் வுடன் நடந்து கொள்ளவேண்டும்.

எனவே தற்போதைய அரசியல் ஸ்திரமற்ற நிலையைக் கருத்திற்கொண்டு, நாட்டின் எதிர்கால நன்மைக்காக பொது மக்களுக்கு முடிவெடுக்கும் வாய்ப்பை கொடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

# ஊவா மாகாண இளைஞர்கள் ஆயுதப் பயிற்சி பெறுகின்றார்கள் என்ற பொலிஸாரின் தகவல்கள் பெய்யானது!

## தொழிலாளர் ஐ.மு. தலைவர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

ஊவாமாகாணத்தின் தமிழ் இளைஞர்கள் 200 பேர் மட்டக்களப்பில் ஆயுதப் பயிற்சி பெற்று வருகின்றார்கள் என்ற பொலிஸாரின் கருத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி.வி.கென்னன் தெரிவித்தார்.

மலையகத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்கள்- கொழும்பிற்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் வேலைக்குச் செல்கின்றனர். அவ்வாறு செல்கின்றவர்கள் பதுளையில், ஆகக்குறைந்த தூரத்தைக்கொண்ட மட்டக்களப்பிற்கும் செல்கின்றனர். அவ்வாறு செல்கின்ற இளைஞர்கள் அனைவருமே, ஆயுதப்பயிற்சி பெற்றுள்ளார்கள் என்று கூறுவது பொய் எனவும், இது பொலிஸாரால் ஜோடிக்கப்பட்ட கதை எனவும் தெரிவித்த அவர்.

அண்மையில் புலிகளிடமிருந்து தப்பிவந்ததாகக் கூறப்படும் ஒருவரைக் காரணம் காட்டி, பொலிஸார் இவ்வாறான செய்திகளை வெளியிடுவது - மலையகத்தில் பதட்டத்தை ஏற்படுதும் என்றும் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளும் படையதிகாரிகளின் மாற்றங்களும்





யாழ். மாவட்டத்தில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்திக்கொண்டிருந்த படைத்தளபதி என சமாதான காலத்தில் பல்வேறு ஊடகங்களிலும் பேசப்பட்ட பெயர் - மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா - அரசியல் சக்தியின் வலுவைக் கூடவே கொண்ட படைத்தளபதி எனவும் பேசப்பட்டது. படைத்தளபதிகள் என்ன செய்வர்? சமாதானம, அமைதிவழி தீர்வுக்கான பேச்சுக்களில் அவர்களுக்கு எவ்வாறான பணிகள் இருக்கின்றன? என்பன போன்ற கேள்விகளுக்கான பதில்களையும் படைத்தளபதிகள் கையாளும் இருவேறு முறைகளையும் பலரும் புரிந்துகொள்வர். ஒருவர் கடும் போக்கானவர் என்றால், மற்றவர் நெகிழ்வுப் போக்கானவராக இருப்பார். இதனை இன்னுமொரு வகையில் கூறுவதென்றால். மாவீரர் நாள் வீதிவளைவு அலங்காரத்தை ஒருவர் கனரக வாகனத்தால் மோதி உடைப்பாரெனின், மற்றவர் சட்டம்பேசி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை காண்பித்து, மெதுவாக கழற்றி எடுக்கப்பார்ப்பார். இதிலிருந்து விளங்கிக்கொள்ளமுடிந்ததை விளக்கியெழுத வேண்டிய தேவையே இல்லை.

யாழ்.மாவட்டபடைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, தொண்டர் படையின் தளபதியாக மாற்றலாக, வவுனியா மாவட்டப் படைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால யாழ்.மாவட்டப் படைத் தளபதியாக வந்துள்ளார். வவுனியா மாவட்டப் படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் விஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டமோ, வவுனியா மாவட்டமோ தமிழர் தாயகப் பிரதேசத்தில் எங்கென்றாலும் நியமிக்கப்படும் படைத்தளபதிகள் - இன்றுள்ள சூழ்நிலையில் ஒரு அரசியல்வாதி தேர்தல் பரப்புரை காலங்களில் நடப்பதுபோல நடக்க வேண்டும். மக்களுக்கு சிரித்த முகத்தை காட்ட வேண்டும். போர்க் காலத்தில் கட்டளையிடுவதுபோல, கர்ணகொடூரமான தொனிகளில் கட்டளைகளைப் பிறப்பிக்கவோ அல்லது இறுக்கமான முகபாவனையுடன் நிமிர்ந்து நின்று தலையை மட்டும் திரும்பி அங்குமிங்கும் பார்ப்பதோ முடியாத நிலையொன்றுக்கு நிர்ப்பந்தித்துள்ளது என்று கூறுவது - பொருத்தப்பாடானதே. அதிகாரதோரணையுடனான போக்கை மூட்டைகட்டி வைக்கக்கூடியவரே இன்றைய சூழ்நிலையில் படைத்தளபதிகளாக அரசுக்குத் தேவைப்படுகின்றனர்.

மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால எப்படிப் பட்டவர் என்பதை, வவுனியா மாவட்டத்தில் அவர் கடமையிலிருந்த காலத்தை திருப்பிப் பார்ப்பதன்மூலம் அறிந்துகொள்ளமுடியும்.

மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவை வரவேற்கும் யாழ்.படையாட்கள் - யாழ்.நகரில் துப்பாக்கிச்சூட்டை நடாத்தி, இரண்டு இளைஞர்களை கடுங்காயத்துக்குள்ளாக்கியுள்ளனர். இதற்கு மக்கள் பலத்த எதிர்ப்பை காண்பித்தனர்.

காணாமற்போனவர்களின் பெற்றோர் சங்கம், மனித உரிமைகள் அணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்திற்குமுன் மறியற் போராட்டத்தைச் செய்தனர்.

இந்துகலாசார அமைச்சர் மகேஸ்வரன் கீரிமலைக்கு போவதற்கு தனக்குள் பிணக்கை தீர்க்க மறியல் போராட்டம் நடத்தினார்.

மக்களின் இயல்பு வாழ்வு தோற்றுவிக்கப் படாத இன்றைய காலத்தில் இதுபோன்ற வரவேற்புக்களுடன் யாழ்.மாவட்டத்திற்கான புதிய படைத்தளபதி யழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தார். ஒருபடைத்தளபதியை இந்து ஆலயத்திற்குள் காண்பதரிது. இந்த ஆண்டு திருக்கேதீஸ்வர மூலஸ்தான வாயிலில், மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவை பக்தியுடன் காணமுடிந்தது.

பக்தியுடன் நிற்பவரும், பக்தியை வைத்து ஆள்பவரும் மக்களின் அரசியல் ஞானத்தை நாடிபிடிக்க முயல்வது நல்லதே. ஆனால், மக்களை இயல்பு வாழ்விற்குள் கொண்டுசெல்வதற்கிருக்கும் தடைகளில் மிகமுக்கியமானதை கவனத்திலெடுத்து அகற்றுவதும் நல்லது. இரு விழிகளாலும் இரு காட்சிகளை காணமுடியாது.

ஆனால், இருவேறு வேளைகளில் தனித்தனியே காணமுடியும். வேசமிடடு ஏமாற்றுவதில் உள்ள ஆபத்து, வேசம் கலையும்போது விளக்கமாகப் புரியும். ஆகவே ஏமாற்றுவதென்பதை தொடராகச் செய்யமுடியாது. தொடராக ஏமாற்றியதாக வரலாறும் இல்லை.

எந்தத் தோலையும் எவரும் போர்க்கலாமென்றில்லை. உதாரணங்கள் எல்லா நேரங்களிலும் பொருந்திவிடாது. சமாதான காலங்களில் தமது அதிகாரம் போய்விட்டதென படையினர் எண்ணுகின்றனர். தனியொரு படை ஆளெனினும் தான் அடக்கியாள்பவன் என்ற மனோ நிலை ஏராளமானவர்களிடம் உள்ளது தான். இதனை படையாட்கள் ஒவ்வொருவரும் தமது உரிமையென்று எண்ணுகின்றனர். இப்படியான மனோநிலை கொண்டவர்களின் மத்தியில் தளபதியின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்று கருத்திலெடுக்க முடியாதவர்களாகவுள்ளனர்.

**கனகரவி**

படையாட்களுக்கு இருக்கும் அதிகார மனோநிலைபோல், படைத்தளபதிகளுக்கும் பலமடங்கு அதிகமாகவே இருக்கும் அல்லது இருப்பதுபோல செயற்படவேண்டும். இதனால் சாதாரண மக்களின் மனோநிலை பதட்டமாகவும், உயிர் வாழ்தலுக்கான அச்சத்துடனும் கடந்துபோகும். மக்கள் தமது வாழ்தலுக்கான உரிமை என்ன என்பதுபற்றி சிந்திக்கும் திறனற்றவராக இருக்கவேண்டுமென்பதற்காகவே, ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளும் அரசுகளின் படைகள் மக்களின் உரிமைகளை மீறி அவர்களை நசுக்கப்பார்ப்பர். இது மக்களின் மத்தியில் எழுந்த விடுதலைப் போராட்டத்தை, 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' எனற நிலைக்கு கொண்டுசெல்வற்காக, மிகவும் அவதானமாக ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்படுமொன்றுதான் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது பற்றி இன்னும் ஒரு விடயத்தை பார்ப்போமெனின் நிரந்தரத் தீர்வு, சமாதானம், அமைதி, பேச்சுவார்த்தை என்று வந்தபின்னும் நிர்வாக ஒழுங்குகளில் படையினர் ஏன் தலையிடவேண்டும், எப்படியான சூழ்நிலையிலும் அவர்களில் செயற்பாடுகள், குறிக்கோள்கள் மாறாது. புதியவர்களின் வரவினால் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமா? என்று பொறுத்துத்தான் பார்க்கவேண்டும்.

மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வவுனியாவிலிருந்து விடைபெறும்போது, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரிடமிருந்து புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசொன்றையும் பெற்றிருந்தார்.

இலங்கை சட்டத்திற்குப் புறம்பாக உருவாக்கப்பட்ட 'உயர் பாதுகாப்பு வலயம்' பற்றி இவர் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வாரென யாழ்.மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவரது அறிக்கைகளும், அறிவுறுத்தல்களும், தரப்போகும் பதில், யாழ்குடாநாட்டை அமைதியாக வைத்திருக்குமா? அரச ஒழுங்குமுறை ஆயுதமாக மட்டுமே செயற்படுவாரா? கேள்விகள் மக்களுடையது. நியாயமானது தானே?







# இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு மூலமான தீர்வு

உலகின் ஏழு கண்டங்களிலும் சுமார் இருபத்தைந்து சமஷ்டி அமைப்பு முறையுள்ள நாடுகள் காணப்படுகின்றன. அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிறசர்லாந்து, ஸ்பெயின், பிறேசில், ஆர்ஜென்ரீனா, ஐக்கிய அரபுஎமிரேடஸ், ஐக்கிய அமெரிக்கா, கனடா, மலேசியா, பாகிஸ்தான், இந்தியா எனபன இவற்றுள் அடங்கும்.

ஒரு காலத்தில் சிங்கள மக்களின் மனங்களைப் பெருமளவிற்குக் கவர்ந்திருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க - இலங்கைக்கு மிகவும் பொருத்தமான அரசியல் முறைமை சமஷ்டியே என்று கூறியிருந்தார். 1926 ஜூலை 17 இல் 'இலங்கையில் சமஷ்டி அரசாங்கம்' என்னும் தலைப்பில் 'மோர்னிங் ஸ்ரார்' செய்திப் பத்திரிகையில் கட்டுரையொன்றை இவர் எழுதியிருந்தார். மேலும் அதே ஆண்டில் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி தெரிவுக்குழு சார்பிலும், 1947 இல் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையிலும் சமஷ்டி முறையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

ஆனால், சுதந்திரம் கிடைத்து இலங்கை அரசை அமைக்குமபோது, சமஷ்டி ஆட்சிமுறை பற்றிய எண்ணம் முன்வைக்கப்பட்டபோதும் அது உடனடியாகவே நிராகரிக்கப்பட்டது. ஒற்றையாட்சிமுறை அமுலுக்கு வந்தது.

1949 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவந்த போது, அப்போது அமைச்சராக இருந்த வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் - அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார், அப்போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் - அரசுடன் சேர்ந்து, அமைச்சர் பதவீயை ஏற்றுக்கொண்டார்.

இதனால், காங்கிரஸில் இருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், குழுவினர் - கட்சியிலிருந்து விலகி, அகில இலங்கை தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். இந்தக் கட்சி இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பே சிறந்த தீர்வு என முன்மொழிந்தது.

லேக்ஹவுஸ் பத்திரிகைள் இக் கடசியை சமஷ்டிக் கட்சியென்றே அழைத்தன. சமஷ்டி என்னும் சொல்- சிங்கள சமூகத்தில் பெருமளவு பதியை உண்டுபண்ணுவதற்கு, பேரினவாதிகளால் உபயோகிக்கப்பட்டது.

சமஷ்டி - சமன் பிரிவினை என்றும், தமிழர்கள் இலங்கையின் 2/3 நிலப்பரப்பையும், 4/5 பங்கு கடற்பரப்பையும் சமஷ்டிமூலம் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுனைகின்றனர் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டது. தமிழ்மொழிக்கு சம அந்தஸ்தும், தமிழரகளுக்கு சமஷ்டி அமைப்பிலான ஆட்சி முறையும் கொடுக்கப்பட்டால், தென்னிந்தியாவிலுள்ள ஆறு கோடி தமிழர்களின் உதவியுடன் சிங்கள மக்களைக் கடலிலுள் தள்ளிவிடுவர் என்றெல்லாம் விஷமப்பிரசாரம் செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் - நாடாளுமன்றத்திலும், வெளியிலும் சமஷ்டி அமைப்பை வலியுறுத்திப் பேசிவந்தார். சிங்களத் தலைவர்கள் அதனை ஒரு பொருட்டாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அதனை ஏளனம் செய்தனர். அடங்காத் தமிழர் முன்னணித் தலைவர் சி.சுந்தரலிங்கம - சமஷ்டி அமைப்பை முன்மொழியும் கட்சிக்குத் தமிழரசுக் கட்சி எனும் பெயர் பெருத்தமற்றது என்றும், சிங்கள - தமிழ் அரசுக்கட்சி என்று இருக்க வேண்டும் என்றும் சொன்னார்.

தனித்தமிழ் நாடே பிரச்சினைக்கு தீர்வு என்றும் அவர் பிரகடனம் செய்தார். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் - அகில இலங்கையிலும் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து கோரினார்.

1976 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டில் - தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜனநாயகரீதியிலான சாத்வீகப் போராட்டம தோல்வியடைந்ததாலும், தமிழரின் குறைந்தபட்சக் கோரிக்கைகள்கூட நிறைவேறாததாலுமே - தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமே தமிழரின் உரிமைகளைப் பெறுவதற்கான மார்க்கம் எனவும், தமிழீழமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றும் கருதிச் செயற்பட்டனர்.

இருபது ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தால், மக்கள் தம் உயிரையும், உடமைகளையும் இழந்தனர். தமிழ் மக்களின் உரிமைகளுக்கான சமாதானத் தீர்வுகாணும் முயற்சியில் ஜனாதிபதிகளான பிரேமதாஸாவும், சந்திரிகா பண்டாரநாயக்கவும் - விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்ததை நடத்தினர். தமிழர்களுக்கான உரிமைகளை வழங்க இவர்கள் தயக்கம் காட்டியதையடுத்து, பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.

2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் - போர்நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் - அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டு, ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் - தமிழீழக்கோரிக்கைக்கு ஒரு மாற்றீடாக சமஷ்டி அமைப்பு முறையிலான தீர்வுக்கு உடன்பாடு தெரிவித்தனர். இதனை எய்துவதற்கும், வட-

**கலாபூசணம் முல்லைமணி**

கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் - இடைக்கால நிர்வாகத்தை வேண்டிநிற்கின்றனர்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கோரிய சமஷ்டி அமைப்பு முறையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டு, தமது தமிழீழக் கோரிக்கையிலிருந்து கீழே இறங்கியுள்ளதை சர்வதேச சமூகம் பாராட்டுகின்றது. இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் - ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி மற்றும் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றை ஆய்வு செய்வதற்கு இறங்கியுள்ளனர்.

தற்போது தென்னிலங்கையிலுள்ள பேரினவாத சக்திகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மீண்டும் சமஷ்டி என்றால் தமிழீழம்தான். அரசாங்கம் - விடுதலைப் புலிகள் கேட்டதையெல்லாம் அள்ளிக் கொடுக்கப்போகிறது. சிங்கள மக்கள் கடலில்தான் விழவேண்டும். உலகிலே இலங்கையில் மட்டும்தான் சிங்கள மக்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் தென்னிந்தியாவில் மட்டும் ஆறு கோடி மக்கள் வாழ்கிறார்கள். சிங்கள இனமும், சிங்கள மொழியும் அழியப்போகிறது எனக் கூக்குரல் இடுகின்றார்கள்.

யுத்தநிறுத்தத்தால் நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையை, ஜனாதிபதி உட்பட அனைத்துச் சிங்கள மக்களும் வரவேற்பதாகக் கூறுகின்றார்கள், விரும்புகின்றார்கள். ஆனால், தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதன்மூலம், நாட்டிலே நிரந்தர சமாதானம் வரும் என்பதை குறுகிய அரசியல் லாப நோக்கில் பேரினவாதிகள் மறுத்துள்ளார்கள். தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கையானது, சமஷ்டி நடைமுறைக்கு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இதனைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு சிங்கள அரசிடமும், மக்களிடமும்தான் விடப்பட்டுள்ளது.

# அத்துருகிரியவில் இராணுவத்தின் ஆயுதக் களஞ்சிய முற்றுகைக்கு முன்னரே தகவல் கொடுப்போர் கொல்லப்பட்டுவிட்டனர்!

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக் களஞ்சியம் முற்றுகையிடப்படும் முன்னரே, இராணுவத்துக்குத் தகவல் கொடுப்பவர்கள் கொலை செய்யப்பட்டுவந்த தாக காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

திருகோணமலையில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் - மிலேனியம் சிற்றி இராணுவக் களஞ்சியம் தொடர்பில் இராணுவ நீதிமன்றின் அறிக்கைக்கும ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிகைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்ட அறிக்கை.

உடத்தலவின்னவில் 10 முஸ்லிம்கள் கொலைச் சம்பவத்தின் பின்னர், அந்தச் சம்பவத்துடன் தொடர்பான தகவல் ஒனறின் அடிபபடையிலேயே மிலேனியம் சிற்றி ஆயுதக் களஞ்சியம் முற்றுகையிடப்பட்டதாக அமைச்சர் கூறினார். ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையில் மிலேனியம் சிற்றி விவகாரத்தில் பிரதமர், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ் அதிகாரி உடுகம்பொல ஆகியோர் தேசத் துரோகிகள் என சிங்களத் தேசியவாதிகளால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01)

# இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்!



பலஸ்தீனத்தில் காஸா, எகிப்து எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ராபா அகதிமுகாமில் திடீரெனப் பிரவேசித்த இஸ்ரேல் படையினர், 5 பலஸ்தீனியர்களை சுட்டுக்கொன்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் இருந்து காஸா பிரதேசத்திற்குள் சுரங்கப் பாதையூடாக வெடிபொருட்களைக் கடத்துவதை தடை செய்வதற்காகவே, இந்த முற்றுகையை மேற்கொண்டதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்தனர்.

காஸாப் பிரதேசத்தில் இரு இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட பின்னரே, முகாம் மீதான முற்றுகையை இஸ்ரேலியப் படையினர் நடத்தியிருந்தனர்.

இதனிடையே, எகிப்தின் வெளிநாட்டமைச்சர் அகமட் மகேர் - இஸ்ரேலுக்கு பலஸ்தீனியர்களுடனான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அவர் ஜெருசலேத்தில் அமைந்துள்ள அல் - அகுசா பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது பலஸ்தீனியர்களினால் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதலின்போது, பலஸ்தீனியர்கள் செருப்புகளை அமைச்சர் மீது எறிந்து தலையில் காயமேற்படுத்தியிருந்தனர்.



எகிப்திய வெளிநாட்டமைச்சர் அப் பள்ளிவாசலுக்கு விஜயத்தை மேற்கொள்வதற்கு முன் - இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனுடனும், வெளிநாட்டமைச்சர் சில்வன் சலோனுடனும் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக உரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பிலிப்பைன்ஸில் மூழ்கிய படகிலிருந்து இருபது பயணிகள் காப்பாற்றப்பட்டனர்



பிலிப்பைன்ஸின் தென்மேற்குப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை கடுமையான மழையுடன் கூடிய புயல் காரணமாக படகு ஒன்றில் துவாரம் ஏற்பட்டதால், அது மூழ்கியதாக நம்பப்பட்டிருந்தது. இந்தப் படகு 68 பிரயாணிகளுடனும், 7 சிப்பந்திகளுடனும் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது, அப்படகில் பிரயாணம் செய்த 20 பிரயாணிகள் பனாமாவிற்கு சொந்தமான சரக்கு கப்பலொன்றினால் பிலிப்பைன்ஸ் தீவான பலபாக்கிற்கும் - மலேசியத் தீவான பங்குய்க்கும் இடையே அமைந்துள்ள கடலில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பலில் பிரயாணம் செய்த 50 க்கு மேற்பட்டவர்களின் நிலை இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதனிடையே, ஒரு வாரத்திற்கு முன் இந்தோனேஷியாவின் மத்திய மாகாணமான லெயிற்றியில் இடம் பெற்ற மண் சரிவில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்கும், மரணமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கும் இந்தோனேஷிய ஜனாதிபதி அப்பிரதேசத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நெடுமாறனின் பிணைமனு இன்று தீர்ப்பு வெளிவரும்!

(சென்னை)

சென்னை ஆலந்தூர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் பிணை கோரியுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகக் கூறி, பொடா சட்டத்தின் கீழ், நெடுமாறன் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதில் சென்னை உயர்நீதிமன்றம்- நெடுமாறன் உள்ளிட்ட நான்கு தமிழர் தேசிய இயக்க நிர்வாகிகளை பிணையில் விடுவித்தது.

இதைத் தொடர்ந்து டாக்டர் தாயப்பன் மற்றும் சுப. வீரபாண்டியன் ஆகியோர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், நெடுமாறன் மீது சென்னை ஆலந்தூர் மற்றும் திண்டுக்கல் சார்பு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அவர் விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் - நேற்றுமுன் தினம் திண்டுக்கல் வழக்கில் நெடுமாறனுக்கு பிணை கிடைத்தது. ஆலந்தூர் வழக்கிலிருந்தும் விடுதலை செய்யக்கோரி, நெடுமாறனின் வழக்கறிஞர் சுந்தரபாண்டியன் மனுச் செய்திருந்தார்.

இந்த மனு மீது நேற்று நீதிபதி ஆனந்தன் விசாரணை நடத்தினார். அப்போது அரசுத்தரப்பு வழக்கறிஞர் நெடுமாறனை பிணையில் விடுதலை செய்யக்கூடாது என்று வலியுறுத்தினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி இந்த மனு மீதான தீர்ப்பை இன்று கூறுவதாக அறிவித்தார். இதனால், நெடுமாறனின் விடுதலை இன்னும் ஒரு நாளைக்குத் தள்ளிப்போயுள்ளது.

# பா.ஜ.க சுயமரியாதையை சோதித்ததாலேயே கூட்டணியிலிருந்து தி.மு.க விலகிக்கொண்டது!

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தமிழக பா.ஜ.க. தலைவர்கள் தி.மு.கவின் சுயமரியாதைக்கு சவால் விடும் வகையில் நடந்து கொண்டதால்தான், கூட்டணியிலிருந்து விலகநேரிட்டது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக முரசொலி நாளிதழில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் - தி.மு.க தலைவர்கள் குறித்தும், தி.மு.கவின் கொள்கைகள் குறித்தும், சில பா.ஜ.க தலைவர்கள் குறிப்பாக, தமிழக பா.ஜ.க. தலைவர்கள் விமர்சித்தும், கேலி செய்தும், அவமானப்படுத்தியும் வந்த காரணத்தால்தான், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க விலக நேரிட்டது.

இந்த முடிவு முன்பே எடுக்கப்பட்ட ஒன்று. ஆனால், முரசொலி மாறன் அப்பலோ மருத்துவமனையிலும், அமெரிக்காவிலுமாக மாறி மாறி சிகிச்சை பெற்று வந்த காரணத்தால், முடிவை சற்று தள்ளிப் போடவேண்டியதாயிற்று. இல்லையெனில் முன்பே நாங்கள் விலகியிருப்போம்.

ராஜினாமா செய்க என்றவுடன் எந்தவித முணுமுணுப்பும் இன்றி பீடுநடை போட்டு டெல்லி சென்றனர் டி.ஆர்.பாலுவும், ராஜாவும். மாறன் உயிரோடு இருந்திருந்தால், பா.ஜ.க தலைவர்களின் நடவடிக்கையைக் கண்டித்திருப்பதோடு, இன்னும் நாகரிகத்தோடு கூட்டணியிலிருந்து விலகியிருப்பர்.



வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு ஒரு இடம்கூட கிடைக்காது என்று சில தலைவர்கள் பகற்கனவு கண்டு கூறிவருகிறார்கள். மக்கள் சேவையாற்ற பதவியையோ, அதிகாரத்தையோ தி.மு.க என்றுமே எண்ணிப் பார்த்ததில்லை. கொள்கையின் அடிப்படையில் செயற்படும் கட்சி தி.மு.க கொள்கையை மதிப்பவர்கள் தி.மு.கவினர் என்று கூறியுள்ளார் கருணாநிதி.

# கொலம்பியப் போராளிகளிடம் இருந்த 5 உல்லாசப்பயணிகளும் விடுதலை!



கொலம்பியப் போராளிகள் கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி 8 உல்லாசப் பிரயாணிகளை இழந்த நகரம் என அழைக்கப்பட்ட 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கொண்டிருந்த பிரதேசத்தில் - துப்பாக்கி முனையில் பணயக் கைதிகளாகப் பிடித்திருந்தனர்.

சென்ற மாதம் ஜேர்மன், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருவரை விடுவித்திருந்தார்கள். மேலும் ஒரு பிரித்தானிய உல்லாசப் பிரயாணி தப்பி ஓடியிருந்தார். தற்போது மிகுதியாக தமது பிடியில் இருந்த ஐவரையும் விடுதலை செய்துள்ளார்கள்.

கொலம்பிய தலைநகர் பொகோராவிற்கு ஹெலி கொப்ரர் மூலம் - செய்ரா நெவாடா மலைத்தொடரில் இருந்த இவர்கள் கொலம்பிய போராளிக் குழுவினரால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். பல மாதங்களாக இவர்களை விடுவிப்பது தொடர்பாக, ரோமன் கத்தோலிக்க பாதிரியாரின் அனுசரணையில் போராளிகளுடன் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றுவந்தன.

இதனிடையே, நெவாடா மலைத தொடர் பிரதேசத்தில் வாழும் இந்திய கிராம மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட இராணுவ அழுத்தங்களை வெளி உலகிற்கு தெரிவிப்பதற்காகவே உல்லாசப் பிரயாணிகள் பணயக் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டிருந்ததாக போராளிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய பிரிவினைவாதிகள் மீது பூட்டான் படையினர் தொடர்ந்தும் தாக்குதல்

பூட்டானில் இந்திய பிரிவினைவாதிகளுக்கெதிராக அந்நாட்டுப் படையினர் தொடர்ந்தும் காடுகளினுள் உள்நோக்கி நகர்ந்து தாக்குதல்களை.மேற்கொண்டு வருவதாக பூட்டான் படையினர் தெரிவித்தனர். தலைநகர் திம்புவில் இந்திய பிரிவினைவாதிகளின் தாக்குதல்களை தடுப்பதற்கு, பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதுவரை 100 பிரிவினைவாதிகளும் 40 பூட்டான் படையினரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, பூட்டானின் வடகிழக்கு இந்திய எல்லைப் பகுதியில் வாழும் பூட்டான் மக்களுக்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்வதை பிரிவினைவாதிகள் தடை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# முதலையின் தாக்குதலுக்குட்பட்டவர்கள் ஹெலிகொப்ரர் மூலம் மீட்கப்பட்டனர்!

## அவுஸ்திரேலியாவில் சம்பவம்



(மெல்பேர்ண்)

அவுஸ்தி ரேலியாவின் வடக்கு பிரதேசத்தில் மூன்று நபர்கள் உல்லாசப் பிரயாணம் மேற்கொண்டிருந்தனர். தமது பிரயாணத்தின் இடையே ஆறொன்றில் நீராடுவதற்கு மூன்று நபர்களும் முற்பட்டவேளை, ஆற்றிலிருந்த முதலையினால் ஒருவர் இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டு - அவரைக் காப்பாற்ற முயன்றவேளை, முதலை திருப்பித் தாக்குவதற்கு முற்பட்டதாகவும், தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு மரம் ஒன்றில் ஏறியதாகவும், தொடர்ந்து 22 மணிநேரம் அம்மரத்தை விட்டு முதலை நகராததால், இறுதியில் ஹெலிகொப்ரரின் உதவியுடன் தாம் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். கடும் மழை காரணமாக - கடல் நீர் ஆற்றுநீருடன் கலந்ததாகவும், இதனால், ஆற்றில் கடல் நீரில் வாழும் முதலை ஆற்றுக்கு வர நேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்ந்து செல்லும் பிராணிகளில் - அவுஸ்திரேலிய கடலில் வாழும் முதலைகள் மிகப்பெரியனவாகக் கருதப்படுகிறன.

மேலும், அவுஸ்திரேலியாவில் 16,000 இற்கு மேற்பட்ட இவ்வகையான முதலைகள் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முன்னாள் அமெரிக்க இராஜாங்கசெயலரை இலங்கைக்கு வருமாறு கதிர்காமர் அழைப்பு!

(கொழும்பு)

முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலர் மெடலின் அல்பிறைட் அடுத்த வருடம் மார்ச் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டுநாள் மாநாடொன்றில் கலந்துகொள்ள இலங்கை வரவுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் நிலையத்தின் ஏற்பாட்டில், அடுத்த வருடம் மார்ச் மாதம் இரண்டு நாள் மாநாடொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவே, முன்னாள் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மெடலின் அல்பிறைட்டுக்கு, பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் நிலையத்தின் தூதுவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அழைப்பு விடுத்தார்.

கடந்தவாரம் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையின் ஏற்பாட்டில் புதுடெல்கியில் இடம்பெற்ற கருத்தரங்கில் லக்ஷ்மன் கதிர்காமரும், மெடலின் அல்பிறைட்டும் கௌரவப் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்திலேயே மெடலின் அல்பிறைட்டை இலங்கைக்கு வருமாறு கதிர்காமர் அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நியூயோர்க்கிலுள்ள வெளியுறவு சபையின் தலைவரான றிச்சர்ட் ஹாஸையும் இலங்கைக்கு வருமாறு கதிர்காமர் அழைப்பு விடுத்திருந்தார்.

அடுத்த மார்ச் மாதம் இரண்டு நாள் தொடர்ந்து நடைபெறவுள்ள மாநாட்டில் தெற்காசியாவில் அமெரிக்காவின் பங்கு என்ன என்ற தொனிப் பொருளில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

# வடபகுதி அபிவிருத்தி குறித்து ஆராய ஒஸ்ரின் தலைமையில் குழு நியமனம்

வட பகுதியில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளை இனம்காண்பதற்காக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். இந்தக் குழு எதிர்வரும் 29 ஆம் திகதி கூடி வடபகுதி அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராயவிருப்பதாகத் தெரியவருகிறது.

ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த எஸ்.சிவானந்தன், மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்கள தலைவர் மகாதேவன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளது.

வட மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டிய புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் இக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## புத்தளத்தில் துப்பாக்கிச் சூடு பொலிஸார், ஊர்காவற்படை கைது

(கெழும்பு)

புத்தளத்தில் நிறுத்தாமல் சென்ற லொறி மீது சந்தேகம் கொண்ட பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக பொலிசார் ஒருவரும், இரண்டு ஊர்காவற் படையினரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் பெண் ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாகவே கைதுசெய்யப்பட்ட பொலிசார் மற்றும் இரு ஊர்காவற் படையினரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் இவர்களை நீதிவான் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டர்.

## அதிகாரங்களைப் பகிர்வதன்...

உருவாக்கக் கூடாது, இவ்வாறு உருவாக்குவதன் மூலம் தெற்காசிய நாடுகளிடையே உள்ள பிரச்சினைகளை விரிவாக ஆராயமுடியும்.

'சார்க்' அமைப்பிலுள்ள நாடுகள் அந்த அமைப்பின் விதிமுறைப்படி தமது பிராந்தியம் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் தமது முக்கியத்துவத்தை ஒரேமாதிரி வைத்திருக்கவில்லை. ஆனால், இதனை இந்தியாமட்டும் உருவாக்கவில்லை. 'சார்க்' அமைப்பிற்கான புதிய வடிவமைப் பையும் மறுக்கமுடியாது எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித் தார்.

இந்தக் கருத்தரங்கின் இரண்டாம் நாள் அமர்வில், இந்தியப் பிரதமர் வாஜ்பாய், இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நியூயோர்க் வெளியுறவுச் சபைத் தலைவர் றிச்சாட் ஹாஸ், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ, அமெரிக்க முன்னாள் இராஜாங்கச் செயலர் மெடலைன் அல்பிறைட் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

## தமிழீழ சுகாதாரப்...

கருத்தரங்குகளில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## இராணுவ...

இந்த விபத்தில் சி.போல்ராஜ் (வயது-18), வி.சஞ்ஜீவன் (வயது-22) இவர்கள் இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (121)

## மதில் இடிந்து...

(வயது-13), ஆதி கோவிலடியைச் சேர்ந்த சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் த.ஜெகதாஸ் (வயது-13) என்பவர் காலில் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் வல்வெட்டித்துறை பொது வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (124)

## படையினரின் அத்துமீறல் குறித்து...

விக்கலாம்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பலரும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக இராணுவத் தளபதியிடம் எடுத்துக் கூறினர்.

எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னங்காணிகளில் இருந்து அறுவடைகளைப் பெற்றுக்கொள்ள இராணுவத்தினர் அனுமதிக்க வேண்டும்.

கச்சாய் கடற்பரப்பில் மீனவர்கள் வள்ளம் மூலம் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு பாடசாலை வேளையில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் சென்றுவர அனுமதிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன.

இதுதொடர்பாக அந்தந்தப் பிரதேச படையதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவத் தளபதி சுசில் சந்திரபால தெரிவித்தார்.

மூளாய் பகுதியிலுள்ள பெண் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, உடனடியாக அது நிறைவேற்றப்படும் எனவும் பதிலளிக்கப்பட்டது.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அனுமதிக்கப்பட்ட அறுநூறு மீற்றர் தூரத்திற்குள் பொதுமக்கள் பலர் இதுவரை குடியேற்றப்படவில்லையெனவும், அவர்களை குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கிராம சேவையாளர் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் அரசசார்பற்ற பிரதிநிதிகளிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள் விடுத்தார்.

படையினர் நிலைகொண்டிருக்கும் வீடுகளுக்கு வாடகை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், வீட்டு உரிமையாளர்களின் பெயர்களைத் தமக்கு தந்துதவும்படியும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இச்தச் சந்திப்பில் இராணுவத் தரப்பில், சுசில் சந்திரபாலவுடன் லெப்.கேணல் எம்.டபிள்யு.இ.வில்பிரட் சில்வா, கேணல் வீரதுங்க 512 ஆவது படையணி அதிகாரி டி.சில்வா ஆகியோரும்,

அரசசார்பற்ற நிறுவனங்களின் சார்பில் அ.நல்லதம்பி, அருட்திரு. ஜெயக்குமார் அடிகளார் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக்கு முன்னர் 512 ஆவது படைத்தளத்தில் இராணுவத்தினருக்கான விசேட கூட்டமொன்று நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## உள்துறை அமைச்சு அதிகாரங்கள்...

சிடம், பொலிஸ் மற்றும் றிசேவ் பொலிஸ், ஊர்காவற்படை, தேசிய அபாய மருந்துக் கட்டுப்பாட்டுச்சபை ஆகிய நான்கு திணைக்களப் பொறுப்புக்கள் மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை - அரச பாதுகாப்பு, உள்துறை அலுவலகப் பாதுகாப்பு, தகவல் தொடர்பு மற்றும் அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்படாத திணைக்களங்கள் ஆகியன அரசியலமைப்பின பிரகாரம் ஜனாதிபதியின் வசமே இருக்கும் என்றும் ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை விடுத்த விசேட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களைப் கடந்த மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா, தன் வசமுள்ள இந்த அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சு வசமுள்ள அதிகாரங்களை வலுப்படுத்திக் கொண்டு உள்துறை அமைச்சை ஐக்கிய தேசிய முன்னணியிடம் மீள ஒப்படைப்பதற்கான நடவடிக்கையாக இது இருக்கலாம் எனவும் ஒரு கருத்து நிலவுகின்றது.

## கிறிஸ்மஸ்...

யகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நத்தார் பண்டிகையான இன்று இரவும், புதுவருடப் பிறப்பான 31 ஆம் திகதி இரவும் வீதியைத் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பஸ்நிலையச் சம்பவம் சிப்பாய்...

முன்னர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினரும் கறுப்புத்துணியால் தலையிலிருந்து கால்வரை மூடப்பட்டநிலையில் நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டனர். அவர்கள் மூவரும் மறைப்புத்துணி அகற்றப்பட்ட பின்னர் ஏனைய இராணுவத்தினருடன் விடப்பட்டனர்.

அதன்பின்னர் - சாட்சிகளான செ.விஜயகுமார், க.சண்முகம் ஆகிய இருவரும் ஒருவர்பின் ஒருவராக அழைக்கப்பட்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டுமாறு பணிக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் முதலாவது சந்தேகநபரான டொலின் நாகொட விதான என்பவரை அடையாளம் காட்டினர். ஏனைய இருவரையும் அடையாளம் காட்டவில்லை.

இந்த அடையாள அணிவகுப்புக்குப் பின்னர் நடைபெற்ற விசாரணைகளின்போது, நீதிவான் இ.த.விக்னராஜா முதலாவது சந்தேகநபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், ஏனைய இருவரையும் தலா ஐம்பதினாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லவும் அனுமதித்தார்.

இந்தக் கட்டளைக்கு அமைய 512 ஆவது படைத்துறை கட்டளை அதிகாரி ஒப்பமிட வேண்டும் எனவும் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை முடியும்வரை குறித்த இராணுவத்தினர் இருவரையும் 512 ஆவது படைத்தளத்தைவிட்டு நீதிமன்ற அனுமதியின்றி இடம்மாற்ற வேண்டாமெனவும் உத்தரவு பிறப்பித்தார்.

நேற்றைய விசாரணைகளில் துப்பாக்கிச் சூடுபட்டு காயமடைந்த பஸ் நடத்துனர் பூரண சுகமடையாத காரணத்தினால் அவரது வாக்குமூலத்தைப் பெறமுடிவில்லை

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1575 திகதி: 23.12.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| T | 6 | 1 | 3 | 2 | 6 | 1 |

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி A/L 2006 யாழ்ப்பாணம்
கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பம்: 28.12.2003
(எமது வழமையான ஆசிரியர் குழு)
குறிப்பு : 24.12.2003 இன்றிலிருந்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-1924)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.